விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, மாசி 5 உ. சனி (16-2-69) துல்கஃதா 28 புத்தகம் 23 இதழ் 17




## தி. மு. கழகத்தில் பிளவு எதுவும் கிடையாது

# கருணாநிதிக்கு முழு ஆதரவு!



"திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு எதுவும் கிடையாது. பிளவு ஏற்படுவதற்கு நான் ஒருபோதும் இடந்தரவும் மாட்டேன். பிளவு ஏற்பட்டு விடக் கூடாதென்பதனாலேதான் முதல்வர் பதவிக்குப்போட்டியிடாமல் நான் விலகிக் கொண்டேன். ஆகவே அண்ணனும் நாங்களும் சேர்ந்து உழைத்துக் கட்டியெழுப்பிய தி. மு. கழகம் உடையுமோ என்று தமிழ் மக்கள் எவரும் கிஞ்சித்தும் கவலையடைய வேண்டாம் என்று திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் தோழர் கருணாநிதியின் அமைச்சரவையில் அங்கம் வகிக்காவிடினும், அவர் ஆட்சிச் சிக்கல் ஏற்படும்போது எனது ஆலோசனைகளைக் கோருவாராகுல், தாராளமாக அளிப்பேன் திரு. மு. க.வுக்கு எனது முழு ஆதரவுமுண்டு"



—இவ்வாறு நாவலர் இரா. நெடுஞ்செழியன் சுதந்திரன் சென்னை நிருபருக்களித்த பேட்டியொன்றின்போது உறுதியான குரலில் தெரிவித்தார்:-

## நெடுஞ்செழியன் அறிவிப்பு!

திரு. நெடுஞ்செழியன் மேலும் தமது பேட்டியில் கூறியிருப்பதாவது:-

"அறிஞர் அண்ணாவுக்குப் பின் தி. மு. கழகம் கலகலத்து விடும்—பிளவுபட்டு விடும் என்ற நாக்கைத் தொங்கப்போட்டுகொண்டு ஆவலுடன் எதிர் பார்த்திருந்தோர் பலர். ஆனால் அவர்களுக்கெல்லாம் நான் எடுத்த முடிவு பலத்த அடியாகி விட்டது.

தி. மு. கழகத்தைக் கட்டியெழுப்பிய பணியில் நான் முக்கிய பங்கெடுத்தவன். கண்ணீரையும் செந்நீரையும் கொட்டிக் கழகத்தை வளர்த்தவன். ஆகவே கழகத்துள் எவ்வித பிளவோ கோஷ்டிப் பூசலோ தலைதூக்குவதற்கு நான் சிறிதும் இடமளிக்க மாட்டேன் என்பதைத் தமிழ் மக்களுக்கு உறுதியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கழகம் மேலும் வலிவும் பொலிவும் சீரும் சிறப்பும் பெற்று வளர்ச்சியடைய என்னாலான பணிகளைத் தொடர்ந்து செய்து வருவேன்.

"தோழர் கருணாநிதியின் அமைச்சரவையில் நான் இடம் பெறுவதற்கு மறுத்துவிட்ட போதிலும், என்னுடைய ஆலோசனைகளை அவர் கோரினால், அதை வழங்குவதற்கு நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். கருணாநிதிக்கும் அவரது அமைச்சரவைக்கும் எப்போதும் எனது ஆதரவு இருக்கும். தி. மு. க. ஆட்சி வலிவுபெற என் முழு ஒத்துழைப்பையும் வெளியிருந்தபடியே அளித்து வருவேன்."

—இவ்வாறு திரு. நெடுஞ்செழியன் கூறி முடித்தார்.

## 'தினபதியின்' பொய்ச் செய்தி நீதிமன்றம் செல்லும்

அறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற அஞ்சலிக்கு அருகதையற்றவர் என்று நான் கூறியதாக 10-2-69 தினபதியில் வெளிவந்திருந்த செய்தி பச்சைப்பொய். என்மீதும், தமிழரசுக்கட்சி மீதும் வஞ்சம் தீர்ப்பதற்காக இச்செய்தியை அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

—இவ்வாறு கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"அப்பத்திரிகையுடனும், அதன் ஆசிரியருடனும் அவர்கள் தமிழினத்துரோகிகள் என்ற காரணத்தால் நான் ஒருபோதுமே தொடர்பு கொள்வது கிடையாது. முன்னரும் என் மீது வஞ்சம் தீர்க்கப் பல பொய்ச் செய்திகளை 'தினபதி' வெளியிட்டிருக்கிறது.

"இப்பத்திரிகையின் நிருபர்களுக்கு பாராளுமன்ற நடைபாதையிற் புகுந்து என்னை மறித்து உரையாட அதிகாரம் கொடுத்தது யார்? பாராளுமன்றக் கட்டடத்துள் என்னுடன் பேசியதாக முழுப்பொய்யை வெளியிட்டு சூழ்ச்சி 'நாடகம் நடத்திய' தினபதி நிருபர்களின் மேல் வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரைக் கேட்கவிருக்கிறேன்.

"இவ்விடயம் நீதிமன்றத்துக்கு செல்லும்;

"என்மீது வஞ்சம் தீர்ப்பதற்காக உலகத்தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் அண்ணா பெயரை இழுத்து தினபதி அவமானப்படுத்தியது மன்னிக்க முடியாத துரோகம்"

## இரத்தினம் அறிவிப்பு

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு!

## அத்தியாயம் (6)

பலவருடங்கள் ரகுவை வளர்த்தபோது ஏற்படாத ஓர் நிம்மதி அன்று அவருக்கு ஏற்பட்டிருந்தது இத்தனை நாட்களுக்கும் வெளிப்படாத ஒரு பாசம் மனதிலே பொங்கியெழ அவர் விரைந்து சென்று அவன் ஈரமேனியைக் கட்டிக்கொண்டபோது ஏற்பட்ட அன்புப்பெருக்கால் அவருக்கு மூச்சுத் திணறியது.

''ரகு இவ்வளவு நேரமும் நீ எங்கடா போயிருந்தாய்..? இவ்வளவு நேரங்கழித்து அதுவும் இப்படிக் கொட்டும் மழையில் வந்துஉனக்குப் பழக்கமில்லையே. இவ்வளவு உரமாகக் காற்றும் மழையும் சீறிக்கொண்டிருக்கும் போது உன்னை நான் எங்கடா தேடுவது...? இத்தனை நேரமும் நான் தவித்த தவிப்பு...? என் குழந்தைகள் நான் பெற்றெடுத்த செல்வங்கள் காலையில் கடலுக்குப் போனவர்கள் இன்னும் வீடு திரும்பவில்லை ரகு. அப்படியிருந்தும் அவர்களுக்காக என் மனம் ஏங்கவில்லை ;உள்ளம் அழவில்லை. ஆனால் நீ... ஆமாம் ரகு நீ..? உனக்கே தெரியவேண்டும். உன் தாய் இறந்த அந்திய நாட்களில் அவள் பிரிவைத் தாங்க முடியாமல் நீ அழுத அழுகையும் உன்னைத் தேற்ற நான் பட்ட பாடும்...? இந்தக் கிழட்டுத் தோளில் பல இரவுகள் படுத்துறங்கியவனடா நீ. அந்தப் பாக்கியம் என் பிள்ளைகளுக்குக் கூடக் கிடைக்கவில்லை. அவர்கள் அழுதாற் கூட அவர்களை நான் ஒருநாள் சுமந்திருக்க மாட்டேன். அதற்காக என் மனைவி என்னுடன் பலமுறை கோபித்திருக்கிறாள். அப்படியாக என் அன்பையெல்லாம் சொரிந்து வளர்த்த உனக்கு ஒரு சிறுகாயம் ஏற்பட்டாலும் என்னால் தாங்க முடியாதுரகு. உலகமும் என்னைச் சும்மா விடாது. அதைத்தான் நீ உணர்ந்து நடக்க வேண்டும் ரகு. அதுதான் நீ எனக்குச் செய்யக் கூடிய ஒரு நன்றிக்கடன்.''

கிழவர் உணர்ச்சியோடு பேசி முடித்துவிட்டு அவனைப் பார்த்தார். அப்போது உணர்ச்சிவேகத்தில் அவர் உடல் நடுங்குவது ரகுவுக்கு நன்றாகத் தெரிந்தது.

அவரது கபடமற்ற அன்புப் பேச்சு அவனது உள்ளத்தை நெகிழ வைத்தது. அவன் அவரையே சில நிமிடநேரம் அன்பொழுகப் பார்த்துக்கொண்டிருந்தான். ஏற்கெனவே நொந்து போயிருந்த அவன் உள்ளம் இப்போது புண்ணாகி அதிலிருந்து பெருகிய உதிரம் அவன் இரு கண்களிலிருந்தும் நீராகப் பெருகியோடியது. உணர்ச்சி வசப்பட்ட அவன் அவரை பாசத்தோடு இறுகத் தழுவிக் கொண்டான்.

'மாமா என்னைப்பற்றி நீங்கள் ஒரு சிறிதுங் கவலைப்படக் கூடாது; உங்கள் மனம் நோகக் கூடியதாக இனி நான் ஒரு சிறு தவறு கூடச் செய்ய மாட்டேன். என்னை நீங்கள் நம்பலாம். இதைவிட நீங்கள் என் மீது காட்டும் அளப்பரிய அன்புக்கு நான் வேறு என்ன கைமாறு தான் செய்ய முடியும்......' என்று உள்ளம் உருகக் கூறினான் ரகு.

'உன்னை நான் நம்புகிறேன் ரகு.' என்று கிழவர் அவன் உணர்ச்சியோடு தழுவிய அந்தத் தழுவலின் இறுக்கத்தைத் தாழமாட்டாமல் மூச்சுத்திணறக்கூறியபோது தான் ரகு தன் தவற்றையுணர்ந்து தன் பிடியைச் சற்றுத் தளர்த்தினான்.

வெளியே வீசிக்கொண்டிருந்த பேய்க் காற்று மழைச் சாரலுடன் சாளரத்தினூடாகச் வந்து திண்ணையைத் தெப்பமாக நனைத்தது. காற்றின் வேகம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. திடீரெனச் சின்னையா ஏதோ நினைத்துக் கொண்டவராய் அவன் பிடியினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு இயற்கையின் கோரத்தன்மையை நோக்கிப் பெருமூச்செறிந்தார். அண்ணன்மார் இன்னும் கடலில் இருந்து திரும்பவில்லையா மாமா...? என்று அவன் கேட்டபோது வளவுக்குள் ஏதோ 'படபட' என்று முறியும் பெரிய சத்தங் கேட்டு வீட்டுக்குள்ளே சென்று பின் முற்றத்தைப் பார்த்தபோது. அங்கே அந்தக் கொடிய காற்றின் வேகத்தைத் தாங்கமாட்டாமல் கட்டாந்தரையில், கிளைகள் நிறைந்த பிஞ்சும் பூவுமாக, பெரிய இராட்சதனை வெட்டி வீழ்த்தியதைப் போல மலர்ந்து கிடந்தது அவர்கள் வேலிச்கு எல்லையாகவும் சற்றுமுன் முறிந்து போன அவர்கள் உறவுக்குத் தூண்டுகோலாகவும் நின்ற அந்தப் பெரிய கொய்யா மரம், அதையே கண் இமைக்காமல் பார்த்து நின்ற ரகுவின் கண்கள் பனித்தன.

பா. பாலேஸ்வரி

அவனது காதலுக்கு உரமிட்டுத் தந்த மரமே அவனுடைய காதற்கதையின் சோகமுடிவை அறிந்து அந்தத் துன்பத்தை தாங்க முடியாமல் தன் உயிரையே மாய்த்துக் கொண்டு விட்டது போன்றதோர் பிரமையில் ரகு சுற்சிலைபோல நின்றபோது அவன் உடலை உராசியதுபோல இன்னும் பலமான சத்தத்துடன் முறிந்து விழுந்தது, எதிர்புறமிருந்த முருங்கைமரம். எங்கும் அந்தக் கோரப் புயலின் உத்வேகம் பரவித் தாண்டவமாடிய போது சின்னையா மனங்குமுறினார். காலையில் கடலுக்குப் போனவர்களல்லவா..? வீட்டுக்குள்ளேயே காற்று இவ்வளவு அட்டகாசம் புரிந்தால் பரந்து திறந்த கடலில் அதன் கொடுமை எப்படியிருக்குமோ எனப் பயந்தார் அவரும் மனிதன்தானே! அதிலும் ஒரு தந்தை. பெற்ற பாசம் அவரைச் சும்மா விடவில்லை, மக்களை நினைத்த போது அவரால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை,

''ரகு என் மக்களுக்கு என்ன நடந்ததோ தெரியாது. இதுவரை திரும்பியிருக்க வேண்டும். இன்னும் காணவில்லை. என் பெற்ற மனம் கிடந்து துடிக்கிறதடா ரகு...! என்று வாய்விட்டுக் குழந்தையைப் போற் கதறிய அவரை ஆசுவாசப்படுத்தி சாய்வுநாற்காலியில் கொண்டுபடுக்கவிட்ட ரகு தன் வேட்டியை மேலே இழுத்து மடித்துக் கட்டிக் கொண்டு வெளியே ஓடத் தொடங்கினான்.

'நீ எங்கடா போகிறாய்...? இந்த அகாத வேளையில் இப்படிப் புயலடிக்கும் போது நீ எங்கும் போகாதேடா ரகு...? நீ போகாதடா'' கிழவர் அவன் செல்லுவதைத் தடுக்கக் கூக்குரலிட்டார். ஆனால் அதைக் கேட்டும் கேட்காதவன் போல் ரகு ஒடிக்கொண்டேயிருந்தான்.

அவன் கால்கள் கடற்கரை மணலைத் தொட்டதும் சிலநிமிடநேரம் கொட்டும் மழையில் அவன் அப்படியே நின்றான், வானத்தில் இருந்து பூமிக்கிறங்கிய ஒரு கோடி மழைத்துளிகளைப்போல அவன் உள்ளத்திலும் ஒரு கோடி எண்ணங்கள உதயமாயின. கடலுக்கும் தரைக்கும் ஆகாயத்துக்கும் பூமிக்கும்வித்தியாசங்கண்டுபிடிக்க முடியாத காரிருள். இடையிடையே வானத்தில் கண்ணிமைக்கும் நேரத்தில் பளிச்சிட்டு மின்னி மறைந்த மின்னற் கோட்டின் ஒளிதான் அவனுக்கு வழிகாட்டியாக அமைந்திருந்தது.

கடலலைகள் ஒரு தென்னை உயரத்திற்கு வானளாவப் பாய்ந்து வீசியதை அந்த மின்னல் ஒளியில் அவன் காணக் கூடியதாக இருந்தது, அப்போது சின்னையாவின் பிள்ளைகளென்ன ஆனார்களோ என்ற சிந்தனைதான் அவன் உள்ளம் நிறைந்திருந்தது. தற்செயலாக அவர்களில் ஒருவருக்காவது ஏதாவது நடந்தால் அதன் பின்னர் சின்னையாவை அவன் நிச்சயமாகக் காண முடியாது.

கடலில் எட்டிய தூரம் வரை மின்னல் ஒளியில் எந்தவொரு வள்ளத்தின் சாயலையும் அவனால் காணமுடியவில்லை. அவன் பார்த்ததை அப்படியே சென்று கிழவரிடம் கூறமுடியுமா......? பிள்ளைகளைக் காணவில்லையென்றால் ஒருவேளை கிழவரே அவர்களைத்தேடிப் புறப்பட்டுவிடக் கூடும் என்பதும் அவனுக்குத் தெரியும். அதனால் அதற்குமேலும் அவ்விடத்தில நின்று சிந்திப்பதில் எதுவித பயனுமில்லை என்பதை உணர்ந்த ரகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போற்செயற்படத் தொடங்கினான்.

தொடர்கதை

அடுத்த சில நிமிடங்களில் அவன் ஏறியமர்ந்த படகு ஓங்கியெழுந்த அலைகளின் அசுரத்தாண்டவத்தில் அங்குமிங்கும் நீரின் மட்டத்தோடு அசைந்தாடியபடி எதிர்நீச்சலிட்டுச் சென்றது. அவனுக்கு எதிர்புறமிருந்து வந்த கொடிய காற்றில் துடுப்பு வலிப்பதே மிகவும் கடினமாக இருந்தது. ஆயினும் அவன் அதைப்பொருட்படுத்தாமல் மிகுந்த பிரயாசைப்பட்டுப் படகைச் செலுத்தத் தொடங்கினான்.

நடுக்கடலில் அவன் படகு சென்று கொண்டிருந்த போது காற்றுச் சுழன்றடிக்கத் தொடங்கியது. அந்தக் காற்றில் இருந்து தன்னையும் படகையும் காப்பாற்றுவது பகீரதப் பிரயத்தனம் என்பதை அவன் உணரத் தொடங்கினான். ஆயினும் அவன் இருந்த மனநிலையில் அவன் உள்ளப் புயலைவிட அங்கு வீசிய சுழல்காற்று ஒன்றும் பிரமாதமாகத் தோன்றாத நிலையில் அவன் துடுப்பை வேகமாக வலிக்கத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் அவன் மரணத்தை ஒரு வரப்பிரசாதமாகக் கருதினான். மரணத்தைத் தழுவிக்கொள்ள அவன் உடலும் உள்ளமும் துடித்துக் கொண்டிருந்தன. ஆயினும் சின்னையாவின் மக்களைத் தேடிப்பிடித்து விடவேண்டும் என்ற குறிக்கோளில் அவன் மரணத்துடன் போராடத் தொடங்கினான்.

தன் படகைச் சூழ்ந்து குமுறிக் கொண்டிருந்த கடலையும் சுழன்றடித்துக் கொண்டிருந்த காற்றையும் பார்த்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவன் அந்த நடுக்கடலில் அகோரமாக ஒரு பைத்தியக்காரனைப் போல் வாய்விட்டுச் சிரித்தான்.

சுழல் காற்றின் வேகம் வரவரக் கூடியதேதவிரக் குறைந்த பாடாக இல்லை. துடுப்பு வலித்துக் களைத்த அவன் கரங்கள் வலியெடுத்தன. இனிமேல் துடுப்பு வலிப்பதில் எந்த பலனுமில்லையென்பதை நன்றாக உணர்ந்த அவன், கையில் இருந்த துடுப்பை வெறுப்புடனும் விரக்தியுடனும் கடலுக்குள் வீசியெறிந்துவிட்டு 'உமா நான் உன்னை விட்டு வெகுதூரம் போகிறேன். உன் அப்பாவின்விருப்பப்படி நான் அவருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்காக இனித் திரும்பிவர முடியாத இடத்துக்குச் செல்கிறேன். எங்கிருந்தாலும் நீ நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ் உமா' என்று கூக்குரலிட்டுக் கூறிக்கொண்டே அந்தப் படகுக்குள் நன்றாக நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டான்.

அடுத்த சில நிமிடங்களில் 'எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு' என்ற இனியகீதம் காற்றுடன் கலந்து மங்கிக் கொண்டே சென்றது.

ஒருசிலமணிநேரம் அடித்த புயலுக்கு அந்த ஊரே பலியாகியது பல வள்ளங்களும் மீனவர்களும் காணுமற் போயினர். வல்வட்டித்துறைக் கடற்கரையோரமெங்கும் மரண ஓலம் கேட்டுக் கொண்டிருந்தது. மக்களைப் பலி கொடுத்த பெற்றோரும் கணவன்மாரைக் காணாத மங்கையரும் சோர்ந்து தலையில் அடித்து அலறிய சத்தத்தைக் கேட்டு அந்தக் கடலலைகள் சற்றுத் தம் உக்ரகத்தைகுறைத்து அவர்களுக்கு அநுதாபம் காட்டுவதுபோல் அமைதியாக அலைமோதின. அந்த ஊரே அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது அந்த நேரத்தில், தான் பெற்ற செல்வங்களையும் வளர்த்த செல்வத்தையும் ஒருமித்துப் பறிகொடுத்தசோகநிலையில் துடித்துக் கொண்டிருந்த சின்னையா அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாதவராய் வேரறுந்த மரம்போல மூர்ச்சித்துத் தரையில் விழுந்தார்.

அவரைக் கண்காணிக்கவோ அல்லது அவரது நிலை கண்டு பரிதலிக்கவோ அவர் பக்கத்தில் ஒரு ஜீவன் கூட இருக்கவில்லை. வெளியே புயற்காற்றின் கோரத் தாண்டவம் அடங்கி மக்கள் ஆரவாரம் ஆரம்பித்திருந்த அந்த வேளையில் சின்னையாவின் வீடு மட்டும் உறங்கிக் கிடந்தது. அங்கே மரண அமைதி நிலவியது.

அந்த வேளையில் ஓர் கட்டாந்தரைமேல் மண்ணையர்ந்திருந்த ரகுகண்விழிக்கிறான். அவனுக்கு எல்லாமே ஒரு புதிராக இருக்கிறது. அவன் விழிகள் அக்கம் பக்கம் பார்க்கின்றன. அங்கே அவனைச் சுற்றி ஒரு கூட்டம் நிற்கிறது. அந்த முகங்களையெல்லாம் அவன் கூர்ந்து பார்க்கிறான்; அவையெல்லாம் அவனுக்குப் புதுமுகங்களாகக் காட்சியளிக்கின்றன;

அவன் தன் இரு கைகளையும் ஊன்றியபடி எழுந்திருக்க முயற்சிக்கிறான். ஆனால் அடித்துப் போட்டதுபோல் அவன் கைகளும் கால்களும் வலிக்கின்றன. அவன் பரிதாபத்தோடு அங்கே கூடி நின்றவர்களைப் பார்க்கிறான். நான்எழும்புவதற்கு எனக்கு உதவிசெய்யுங்கள் என்று கேட்பதுபோல் இருக்கிறது அந்தப் பார்வை, அந்தப் பார்வையைப் புரிந்து கொண்டது போல அந்த கூட்டத்தில் நின்ற ஓரிருவர் அவன் எழுந்து உட்காருவதற்கு உதவுகின்றனர்.

''தம்பி நீ மறுபிறப்பு எடுத்திருக்கிறாய் அப்பா...... ஆமாம்! நீ தப்பியது உன் பெற்றோர் செய்த புண்ணியமாக இருக்க வேண்டும். நாங்கள் மட்டும் தற்செயலாக கடலுக்கு வந்திருக்காவிட்டால் இந்நேரம் நீ பிணமாக இருக்கவேண்டியவனப்பா. ஏதோ உன்னைக் காப்பாற்றிய தெய்வத்துக்கு நன்றி செலுத்து. உன் படகு புயலில் சிக்கித் தவிப்பதைத் தூரத்தில் இருந்து கண்டதால் விரைவில் வந்து உன்னைக் காப்பாற்றக் கூடியதாக இருந்தது. நாங்கள் மட்டும் கொஞ்சம்பிந்தியிருந்தாற் கூட உன்னை உயிருடன் கரைசேர்த்திருக்கமுடியாதப்பா. உன்னைக் காப்பாற்றிய ஒரு சில நிமிடங்களுக்குள் உன் படகு சுக்குநூறுவதை நாங்கள் எங்கள் கண்கூடாகக் கண்டோம். ஏதோ உன் விதி... நல்லதலையெழுத்துக் தப்பிவிட்டாய். ஆமாம! நீ எந்த ஊர்...? இந்த புயற்காற்றில் தனியாக ஒரு படகில் வர எப்படி உன் பெற்றோர் அநுமதித்தனர்.!' என்று நடந்ததை விளக்கி வினாவுடன் முடித்தார் அங்கே நின்ற ஒரு பெரியார்.

ரகு அவரை நன்றிப் பெருக்குடன் பார்த்தான். ''மிக்க நன்றி ஐயா...நான் ஒரு அநாதை... 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கையுடன் வாழ்பவன் நான். என்னைக் காபபாற்றியதற்கு ரொம்ப நன்றி. பாவம் உங்களையெல்லாம் ரொம்பச் சிரமப்படுத்தி விட்டேன். அதற்காக என்னைமன்னித்து விடுங்கள். கடவுள் உங்களை ஆசிர்வதிக்கட்டும். அதைவிட நன்றி செலுத்துவதற்கு என்னிடம் வேறு எதுவுமே இல்லை. இனி நான் என் வழியைப் பார்த்துக் கொள்வேன். நீங்கள் சுகமாகச் சென்று "வாருங்கள் என்றுஅன்புடன் கூறினான் அவன்.

''ஏதோ உன்னைக் காப்பாற்றியதில் எங்களுக்கும் பெருமகிழ்ச்சி தம்பி. இந்தா உன் கைச் செலவுக்கு இந்-

(9-ம் பக்கம் பார்க்க)

முப்பது ஆண்டு காலமாக அண்ணா அவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவரும், கழகம் நடத்திய போராட்டங்களில் பலமுறை சிறைசென்றவருமான—சி.வி. இராஜகோபால்எம்.எல்.சி அண்ணாவைப்பற்றி எழுதிய கட்டுரை...

# அண்ணாவுடன் 30 ஆண்டுகள்!

தமிழன்னையின் தரம் உயர, தக்க பல வழிமுறைகளைச் செய்தவர்—

தமிழினம் தலை நிமிர தளராமல்— அயராமல் —துவளாமல் பாடுபட்டவர்......

நாட்டு நலமே வீட்டு நலம் என்கின்ற நன்னோக்கம் கொண்டவர்......

உண்ணாமல், உறங்காமல் ஊர் ஊராகச் சுற்றி யலைந்து கொள்கை முழக்கம் செய்த கொள்கைச் சிங்கம்......

தன்னலம் கருதாத தங்கம்......

உயர்வு தாழ்வு பேதமின்றி 'சமநீதி' தழைக்க வேண்டும் சமுதாயத்திலே என்றவர்...

ஏங்கிக் கிடந்த இதயங்களிலும் தூங்கிக் கிடந்த உள்ளங்களிலும் எழுச்சியை, புதியதோர் உணர்ச்சியை உண்டாக்கியவர்...

—என்றெல்லாம் ஆன்ற விந்தடங்கிய சான்றோர் போற்றிடும், என் காஞ்சி தந்த ஞானியை...பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி விமர்சிக்கும் துணிச்சல் எனக்குக் கிடையாது; ஆற்றல் எனக்குக் கிடையாது.

ஆடம்பரத்தில் அமிழ்ந்து —அழிவுப் பாதையில் சென்ற என்னை, அறிஞர் அண்ணா அவர்கள் தடுத்தாட்கொண்ட சிறப்பை நான் எப்படி வெளியிடுவது என்று திகைக்கிறேன்.

## திருவாளர் குயுக்தி

அறிஞர் அண்ணா காலமான அதிர்ச்சியிலிருந்து திருவாளர் குயுக்தியார் இன்னும் விடுபடாத நிலையிலிருக்கிறார். அடுத்தவாரம் முதல் மீண்டும் வாசகர்களை மகிழ்விப்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

இந்த உலகத்தில் எனக்கு இருக்கின்றபெருமை, செல்வம், இன்பம், அத்தனையும், கடந்த இருபத்தைந்தாண்டுகளாக அவருடன் நெருங்கி இருந்தது ஒன்றுதான்! தனித்து இருக்கும் போதெல்லாம் அந்த வடிவத்தை, அறிவை, ஆற்றலை எண்ணி எண்ணி இன்பக் கண்ணீர் வடிக்கிறேன்.

மலைபோல் குவிந்திருக்கும் புத்தகங்களின் நடுவே குந்தினால், மனம் சோராமல் அவைகளைப் படித்து முடித்துவிட்டுத்தான் எழுவார் அவர்; இப்படியொரு தனித்தன்மையை அண்ணா அவர்களைத் தவிர — வேறு எவரிடமும் கண்டதில்லை நான்!

என் உள்ளத்திலே குடியிருக்கும் அந்த அறிவுத் தேக்கம், உண்மைத் தோற்றம்—படிக்காத புத்தகங்கள் உண்டென்றால், அவைகள் எழுதப்படாத புத்தகங்களாகவே இருக்கும் என்று துணிந்து சொல்வேன் நான்.

'கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு'—என்றாளே ஔவை மூதாட்டி, அதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்; என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது!

அண்ணாதான் அந்த ஔவையின் வாக்கைப் பொய்யாக்கிவிட்டாரே! கற்றது உலகளவு; கல்லாதது(உண்டென்றால் அது) கைம்மண் அளவு — என்பதற்கோர் எடுத்துக்கட்டாக விளங்குகின்றாரே!

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பார்களே, அதற்கு மாறுபட்டவன் நான்.

காரணம், கடந்த 29, 30 ஆண்டுகளாக என் அண்ணனுடன் இருந்த இன்பத்தை நானே எண்ணி எண்ணிப் பெருமைப்பட வேண்டும் என்ற ஆசை தான்! இதை இன்னொருவரிடம் சொன்னாலோ, அல்லது எழுதினாலோ அந்த இன்பத்தில் ஒரு மாத்திரை குறைந்து விடுமோ என்ற அச்சம்! எனவே, நான் விரிவாக எழுத முடியவில்லை!

ஆனால், ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிடுகிறேன்.

1947-ல் இந்நாடு சுதந்திரம் அடைந்ததல்லவா!



அண்ணன் துரோகி'' என்று ஏசிப் பேசினர்; என்னை, என்றால் கட்டுப்படுத்த முடியவில்லை! அவர்களுடைய பேச்சைக் கேட்டு, நானும் பெரும் சினம் கொண்டு ஊர் முழுதும் திட்டவே ஆரம்பித்துவிட்டேன்!

கோவை சென்றுவிட்டு சுதந்திர விழா தினத்துக்கு மறுநாள் வீடு திரும்பும் அண்ணனை, தேரடிக்கு எதிரில் பார்த்தேன் நான்; ஆனால் பேசவில்லை.

நாலுபேர் நடமாடும் பொது ரோட்டிலே திட்டலாமா—என்ற எண்ணம் பிறந்தது.

அவரோ, என்னைப் பார்த்த உடனே குதிரை வண்டியை நிறுத்தச் சொல்லி, 'ராஜகோபால்! ராஜகோபால்!' என்று வழக்கம்போல் ஆசையோடு உரத்த குரலில் அழைத்தார் என்னை; கோபம் கொப்பளித்தது எனக்கு.

திரும்பிக்கூடப் பாராமல், மிகக் கோபத்தோடு, கடுமையான வார்த்தைகளால் 'போங்க!போங்க!! காங்கிரஸ்காரர்களெல்லாரும் வடை, பாயசம் செய்துவைத்துக்கொண்டிருக்கிறார்கள்; போய் சாப்பிடுங்கள், மாலை வாங்கிக் கொள்ளுங்கள்.' என்று கடை வீதியில் பலர் முன்னிலையில் ஏசிவிட்டு, திரும்பிப் பாராமல் போய்விட்டேன்.

பக்கத்தில்தான் என் வீடு! ஆனாலும், அவர் இருக்கும் திசையிலேயே போகவில்லை நான்!

பத்து நாள் கழித்து ஏதோ, சந்தர்ப்பத்தில் இருவரும் சந்தித்தோம்; மிகக் கடுமையான வார்த்தைகளைப் பேசிய என்னை, ஆடிசன் பேட்டையில்—அவரது அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். முரடனாக இருந்த என்னிடம் அமைதிப்படுத்தும் வகையிலே ஏதேதோ சாந்தமான வார்த்தைகளைப் பேசினார்.

திராவிட நாட்டிலே எழுதிய 'சுதந்திரதினம் நம்முடைய தினம்' என்ற கட்டுரையை எடுத்துப் படித்தார்.

அவர் படிக்கக் கேட்டுக் கொண்டிருந்த என் கல் மனம் உருகியது; கண்ணீர் மல்கினேன் நான! இன்னும் அதை மறக்க முடியவில்லை.

எல்லா மக்களுடைய உயர்வு தாழ்வு போக்கும் வகையும், அடிமைத்தனம் நீக்கப் படப் போவதையும், வறுமை ஒழிக்கப்பட வேண்டிய வகையும், சுதந்திரத்துக்கு பிறகுதான் பிறக்கிறது—என்ற அந்தக் கட்டுரையை எப்படி மறக்கமுடியும் என்னால்!

விரோதம் பாராட்டிய என்னிடம், அவர் காட்டிய பெருந் தன்மையைத்தான் என்னென்பேன் நான்!

எப்படிக் கூறுவேன்!!

என் திட்டுக்கும், ஊரார் திட்டுக்கும் அவர் காட்டிய பொறுமை, ஞானிகளையும் தோற்கடிக்கும்; அவரைத் திட்டுகிறபொழுதெல்லாம், இன்னும் இவர்கள் புரிந்துகொள்ளவில்லையே, இன்னும் மடமை அகலவில்லையே என்றுதான் சிரித்திருக்கிறார் அவர்.

அப்போது அவரது திராவிட நாடு பத்திரிகையில், சுதந்திரத்தைப் பாராட்டியும் அவருடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தும், விழாக்கொண்டாடும் படியும், அந்நியனை அப்புறப் படுத்திய தியாகச் செம்மல்களைப் பாராட்டியும், இவர் (பேரறிஞர் அண்ணா அவர்கள்) கையால், பக்கம் பக்கமாக எழுதிவிட்டாரே என்ற கொதிப்பில் இருந்தேன்!

காரணம், பெரியார் அந்த நாளைத் 'துக்கதினம்' —தமிழர்களின் 'அடிமை தினம்' என்று எழுதி வந்தார்: பல திராவிடர் கழகத்தவர்களெல்லாம் என்னைப் பார்த்து, ''உங்கள்

என், முப்பது வருடப் பொதுவாழ்வில் அந்த ஒரே ஒரு முறைதான் பேரறிஞர் அண்ணா அவர்களை நான் திட்டியிருக்கிறேன்! என் ஞானக் கண்ணை அந்த நேரத்தில் திறந்து வைத்த அறிவை, ஆற்றலை என்னால் எப்படி மறந்துவிடமுடியும்?

# முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.காணும் அண்ணா

கல்லூரியில் வருந்திக் கற்று, 'கலைத் தலைவன்' என்ற எம். ஏ. என்ற பட்டமும் பெற்று, பிறகு ஆசிரியர் துறையிலோ வழக்கறிஞர் துறையிலோ, வணிகத் துறையிலோ புகாமல், பொது வாழ்வுத் துறையில் புகுந்தவர் தமிழ் நாட்டில் முதன் முதலாக அன்பர் அண்ணாதுரை ஒருவரே ஆவர்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், தமிழ் மக்களின் வாழ்வுக்காகத் தன் வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டவர் எனக்கூறலாம். இதற்காக நண்பர் அண்ணாதுரை அவர்களுக்குத் தமிழ்மக்கள் நன்றி செலுத்த வேண்டும். அதைவிட அதிகமாக அவரை வளர்த்து, ஊக்குவித்து, நாட்டின் பொதுவாழ்வுக்குத் தந்து உதவிய அவருடைய 'தொத்தா'வுக்கு நன்றியும், வணக்கமும செலுத்தத் தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவர்.

ஆங்கிலம் கற்றவர்களில் பலர் அம்மொழியிலேயே அமிழ்ந்து விடுகின்றனர். இரண்டொருவர் கரையேறினாலும் அவர்கள் ஏறியது தமிழ் நாட்டுக் கரையாக இருப்பதில்லை. ஆங்கிலக் கடலை நீந்தி தமிழ்க்கரை ஏறிய அறிஞர்களுள் அன்பர் அண்ணாதுரையும் ஒருவராவர். பிற மொழியிற் கண்ட கலை அறிவைத் தாய் மொழி வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதே தலையாய மொழிப்பற்று ஆகும். இத்துறையில் அன்பர் அண்ணாதுரையின் கலை அறிவும், மொழிப்பற்றும் எவராலும் போற்றற்குரியனவாம்.

இக்காலத்திய மேடைப் பேச்சுகளில் செயல்படு பொருளை முன்னே வைத்து பயனிலையை, எழுவாயைப் பின்னே வைத்துப் பேசும் வழக்கம் ஒன்று இளைஞர்களால் கையாளப் பெற்று வருகிறது. அது ''தூது அனுப்பினான் பதில்வந்தது.' என்றிராமல் ''அனுப்பினான் தூது, வந்தது பதில்'' என்றிருக்கும். இம்முறையை நம்நாட்டில் முதலிற் புகுத்தியவர் அன்பர் அண்ணாதுரையே ஆவர்.

இம்முறையானது தமிழ் இலக்கணத்துக்கு மாறுபட்டது எனக்கூறினாலும் செவிச்சுவைக்கு வேறுபட்டது எனக் கூறிவிட முடியாது.

அவர் பேசும் பொழுது தன் குதிகாலை உயர்த்தி, உயர்த்திப் பேசுவது வழக்கம். பேச்சில் நகைச்சுவையும், வீரச் சுவையும் மாறி மாறிக் காட்சியளிக்கும்; அடுக்குச் சொற்கள் அதிகமாக வந்து விழும். குறுகிய உருவமும், குறும்புப் பார்வையும், புருவ நெரிப்பும், இனிய குரலும், எடுப்பான ஓசையும், வெற்றிலை அடக்கிய வாயும், வீராவேசச் சைகையும் பற்றில்லாதவரையும் பற்றுக் கொள்ளச் செய்யும் பான்மையுடையனவாகும்.

மிகப்பெரியவர்கள் என்று கூறப்படுகின்ற மேடைப் பேச்சாளர்கள் பலராலும் போற்றிப் புகழ்ந்திடத்தக்க நாவன்மை உடையவர்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால் தமிழ் நாட்டில் உயர்ந்த பேச்சாளர்களின் கூட்டத்தில் முதல் வரிசையில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரில் அன்பர் அண்ணாதுரையும் ஒருவர் என்றே கூறியாகவேண்டும்.

அன்பர் அண்ணாதுரை அவர்கள் ஒரு சிறந்த அறிஞர்! நல்ல எழுத்தாளி!



உயர்ந்த பேச்சாளி! மூனேந்த உழைப்பாளி! சீர்திருத்த வாதி! பத்திரிகை ஆசிரியர்! நாடகக் கதாசிரியர்! நடிகர்! எனக் கூறலாம்.

## எண்ணம்

### கருணாநிதியும் நெடுஞ்செழியனும்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்ததைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்காலமென்ன? அண்ணாவுக்குப் பின்னர் தமிழ் நாட்டு முதலமைச்சராக வரப் போகிறவர் யார் என்ற கேள்விகள் உலகத் தமிழ் மக்கள் அத்தனை பேருடைய உள்ளங்களையும் துளைத்துக் கொண்டிருந்தது. கழகத்துள் பிளவு பிரிவு ஏதுமின்றிக் காரியங்கள் எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டுமேயென்று கவலைப்படாத தமிழ் உள்ளம் இருக்கவே முடியாது.

உலகத் தமிழ் மக்கள் இப்படிக் கவலைப்பட்டதிலும்' ஆர்வமும் துடிப்பும் காட்டியதிலும், ஆச்சரியம் எதுவும் இருக்க முடியாது. தமிழ் நாட்டு மக்களின் விடுதலைக்கு மட்டுமன்றி உலகமனைத்தும் சிதறிப் பரந்து வாழும் அத்தனை தமிழர்களுக்கும் ஆதரவு தரவும் அணைத்துச் செல்லவும் கூடிய தாயப் பறவை போல அண்ணாவின் தலைமையின் கீழ் திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை விளங்கி வந்திருக்கிறது. வெளிநாடுகளில் உரிமை இழந்து அல்லற்படும் திராவிட இனத்தினருக்குத் தமிழ் நாட்டிலிருந்து கொண்டே திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஆத்மிக பலத்தை அளித்து வந்திருக்கிறது. எனவே உலகத் தமிழர்களின் விடிவெள்ளியாக விளங்கும் கழகம் அண்ணாவுக்குப் பின் சிதறுண்டு விடாமல் கட்டுக் கோப்பாக இயங்க வேண்டுமே என்பதில் தமிழ் மக்கள் காட்டிய ஆர்வம் வியப்பன்று.

அதே வேளையில் பதவிப் போட்டிகளினாலும், கோஷ்டிப் பூசல்களாலும், கழகம் கலகலத்து விடும்—சிதறுண்டு விடும் என்று அரசியல் எதிரிகள் நாக்கைத் தொங்கப் போட்டபடி காத்திருந்தனர்.

ஆனால் தமிழர் சிந்தையெல்லாம் மகிழவும்—அரசியல் எதிரிகளின் எண்ணத்தில் இடியேறு விழவும் கூடிய விதத்தில், தி. மு. கழகம் அமைதியாக, ஜனநாயக முறையில் அண்ணாவுக்குப் பின் தமிழ் நாட்டு முதலமைச்சர் யார் என்ற கேள்விக்குத் தீர்வு கண்டிருக்கிறது. போட்டியின்றிப் புதிய தமிழ் நாட்டு முதலமைச்சராக கலைஞர் மு. கருணாநிதியைத் தெரிவு செய்த தி. மு. கழகத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

புதிய முதலமைச்சரைப் போட்டியின்றித் தெரிவு செய்யக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த பெருமையும் புகழும் நாவலர் நெடுஞ்செழியனையே முழுக்க முழுக்கச் சாருகிறது. கட்சி சிதைந்துவிடக் கூடாது—கழகத்தைக் கண்டு மாற்றார் எள்ளி நகையாடக் கூடிய நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது—என்பதற்காக திரு. நெடுஞ்செழியன் கடைப்பிடித்த பொறுமையையும், செய்த தியாகத்தையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

தமிழ் நாட்டு முதலமைச்சர் பதவிக்கு அண்ணாவின் வாரிசாக திரு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்ட போதிலும், அண்ணாவிடம் விளங்கிய அடக்கம், பெருந்தன்மை, விட்டுக்கொடுக்கும் சுபாவம் போன்ற சிரிய பண்பாடுகள் பலவற்றுக்கெல்லாம் அண்ணாவின் வாரிசாக தாமே விளங்கி வருவதை தமது செயல் மூலம் நாவலர் நிலைநாட்டி விட்டார்.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை, அண்ணாவுக்குப் பின் தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக நாவலரே தெரிவு செய்யப்படலாமென்று மிக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது உண்மை தான். முதலமைச்சர் பதவியை நாவலருக்கு கருணாநிதி விட்டுக் கொடுத்திருந்தால், கருணாநிதியின் பெருமை இன்னும் ஒரு படிமேலே உயர்ந்திருக்கும். ஆனால், கழக நன்மையைக் கருதி போட்டியிலிருந்து விலகி திரு. கருணாநிதிக்கு விட்டுக் கொடுத்ததன் மூலம், நாவலர் பெருந்தன்மையின் உச்சிக்கே போய் விட்டார்.

இத்தகைய பொறுப்புணர்ச்சியும் கட்சிப் பற்றும் உடையவராகவிளங்கும்நாவலர் தமது மனதையும்மாற்றிக் கொண்டு தமிழ் நாட்டு அமைச்சரவையிலும் அங்கம் வகித்துப் பணியாற்ற வேண்டு மென்பதே நமது விருப்பமாகும்.

" திரு. கருணாநிதியின் அமைச்சரவையில் அங்கம் வகிப்பது தமக்கு இழுக்கு என்ற எண்ணத்தை நாவலர் மாற்றிக் கொள்ள வேண்டும். தி. மு. க. வை ஆட்சிபீடமேற்றிய தமிழ் நாட்டுமக்களுக்கு அதுவும் அண்ணாவும் இல்லாத இச்சமயத்தில் நல்லாட்சியை அளிப்பதற்கென்றாலும், நாவலர் அமைச்சரவையில் இடம் பெற்றேயாக வேண்டும். கழகத்தின் இருபெரும் தூண்களான நாவலருக்கும் கலைஞருக்குமிடையேயுள்ள ஊடல் தீர வேண்டும். இதுவே இலங்கைத் தமிழ் மக்களின் விருப்பமென்பதை தெளிவாகக் கூற விரும்புகிறோம்.

முதல் அமைச்சர் பதவியை ஏற்றுள்ள திரு. கருணாநிதிக்குக் கஷ்டமான பொறுப்புக்கள் பல இருக்கின்றன. இந்தியைத் தமிழகத்துக்குள் எப்படியும் திணித்துவிட வேண்டுமென டெல்லி ஒரு பக்கம் துடியாய்த் துடிக்கிறது. மறுபக்கம் டெல்லியை எதிர்த்து மாணவர்களின் போர்க்கோலம்! இன்னொரு பக்கம், சமய சந்தர்ப்பம் பார்த்து தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்கும் தமிழ்நாடு காங்கிரசின் சதி முயற்சிகள். வேறொரு பக்கம் தொழிலாளி—முதலாளி கூலித் தகராறுகள்! இப்படிப் பல பிரச்சினைகள் சவால் விடுகின்றன.

இத்தனை பிரச்சினைகளையும், அண்ணாவின் வழி நின்று சமாளித்து பதட்டம்படாமேபோயமின்றி, நிதானத்தை இழக்காது ஏனைய தி. மு. க. தலைவர்களின் கூட்டு ஒத்துழைப்பையும் பெற்று, தமிழ் நாட்டரசையும் தமிழ் மக்களையும் சரியான வழியில் திரு. கருணாநிதி நடத்திச் செல்வாரென்று எதிர்பார்க்கிறோம்.

# தமிழின் விதி இப்படியா ஆக வேண்டும்?

(சுத்தானந்தபாரதியார்)

மருத்துவ நிலையத்தில் இறுதியாக அண்ணாவைக் கண்டேன். என் கண்ணீர் மனதைஉடைத்துக்கொண்டு வந்தது.

தமிழ்நாட்டு முடிசூடா மன்னன் வேட்டையாடிக் களைத்த சிங்கம்போல விழுந்து கிடந்தார்.

ஆயிரம் மேடைகளில் தமிழர் உரிமைக்காக வீறிட்ட அவர்வாய் அடைத்திருந்தது.

எனினும் தமிழர் நலத்தைச் சிந்திக்கும் சிந்தனைச் சிற்பமாக விளங்கியது அவர் முகம்.

அமைச்சர்களும், தலைவர்களும் (எம். ஜி. ஆரும்) சோகமே உருவாக அமர்ந்திருந்தனர்.

நான் மருத்துவரிடம் நாடித் துடிப்பு எப்படி என்று வினவினேன்.

நாடி விரைவாகத் துடிக்கிறது—120—என்றனர்.

### தமிழகத்தின் நாடியும் விரைவாகவே "அண்ணா அண்ணா" என்று துடித்தது

நெடுஞ்செழியனைப் பார்த்தேன் மீண்டும் அண்ணாவைப் பார்த்தேன் தேம்பித்தேம்பி அழுதேன்.

அண்ணா என்றால்
ஆர்வத் தமிழர்
அள்ளும் உள்ளம்
துடிக்குமே
அண்ணா என்றால்
அறிவின் வளமை
அன்புக் கண்ணீர்
வடிக்குமே.

—என்று மீண்டும் அழுதேன்.

"தமிழுக்கு அரசுவேண்டும், உரிமை வேண்டும் என்று தவங்கிடந்தோம். அரசும்வந்தது. உரிமை வந்தது. உலகத்தமிழர் மாநாடு மிகச் சிறப்பாக நடந்தது.

மெட்ராஸ் ஸ்டேட் தமிழ் நாடானது.

மக்கள் பொருளாதார நிலைமையும் சீரானது. மற்றெந்த நாட்டினும் தமிழ் நாடு அமைதி நிலையமானது. திருக்குறள் உலக நூலாகத் திகழ்கிறது.

திருக்குறளை உலகம் அறிய நானும் ஆங்கிலச் செய்யுளாக்கி உரையுடன் வெளியிட்டேன்.

இன்னும் தமிழுக்குச் செய்யவேண்டிய பணிகள் ஆயிரம் உண்டு. இந்த நலங்களுக்கெல்லாம் உயிர்த் துடிப்பாயிருந்த அண்ணா உயிருக்குத் துடிப்பதைக் கண்டு என் உள்ளம் துடித்து விழி நீருகுத்தது.

அதோ ம. பொ. சி. வருகிறார். "தமிழின் விதி இப்படியானதே" என்று விம்மினேன்.

மந்திரிகளைப் பார்த்து "நமது துயரத்தையெல்லாம் பணிவீருக்குக! மனத்திட்பமும் வினைத்திட்பமும் கொள்வோம் என்று உறுதி சொல்லி வெளியே வந்தேன்.

ஆயிரம் மக்கள் கவலை தேங்கியமுகத்துடன் வரிசை வரிசையாக நின்றனர்.

"அண்ணா எப்படி" என்று ஆவலாக வினவினர்.

### தமிழ் உயிரோடிருக்கிறது அஞ்சாதீர் என்று சொல்லிக் கொண்டே சென்றேன். ஆனால் என் நம்பிக்கை பழுதாய் விட்டது.

அண்ணா முத்தமிழ் அரசு—முன்னேற்ற பேரிகை தமிழர் உரிமையின் எக்காளம்—அண்ணாவை இன்று உலகம் அறிந்துபோற்றுகிறது. நாளை உலகம் தனது வரலாற்றில் அண்ணாவுக்குச் சிறந்தஇடம் தரும்—தமிழ் உள்ளமட்டும் தமிழ்க்கொடி பறக்குமட்டும் அண்ணா மலைவிளக்கென விளங்குவார்.

# இமிடேட் பண்ணாத பேச்சாளர் அண்ணா!

(நாரண துரைக்கண்ணன்)

1934-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். சென்னை ஜார்ஜ்டவுன் ஏழுகிணறு வட்டத்தில் உள்ள ஒரு வீட்டுமேல்மாடியில் "காம்ரேட், லிட்டரரி பார்லிமெண்ட்" சார்பில் ஒரு பொதுக் கூட்டம். ஏதோ ஒரு விஷயம் பற்றி (அக்காலத்திய அரசியல் நிலை குறித்துத் தான் எனக் கருதுகிறேன்.) உரையாடல் நடந்து கொண்டிருக்கிறது.

கோபாலரத்னம் பேசினார்; செங்கல்வராயன் சொற்பொழிவு ஆற்றினார்; பாலசுப்பிரமணியம், இன்னும் பலர் பேசினர்கள்.

கடைசியாக வந்தார் ஐயா, ஆசாமி ஒருத்தர். ஐந்தடி ஒரு அங்குலம் உயரம் இருக்கும். சப்புண்டியான சரீரம்; அறிவுத் திட்பத்தை வெளிப்படுத்தும் அகன்ற நெற்றி; ஆழ்ந்த சிந்தனையில் மிதக்கும் பெரிய கண்கள்; ஆட்களைக் கவரும் எடுப்பான மூக்கு; மீசை சரியாகக் கூட அரும்பவில்லை.

"தோழர்களே!" என்று கூட்டத்தினரைப் பார்த்து, அவ்வளவு தான்; அருவி போல் ஆங்கிலப் பேச்சு யாவரையும் பிரமிக்க வைத்தது. அவர் உள்ளத்திலிருந்து எழும் சந்தர்ப்ப உணர்ச்சிக் கேற்பச் சொற்கள் சரளமாக வெளி வந்து கொண்டிருந்தன. பொருள் பதிந்த அவர் பேச்சில் தெளிவு இருந்தது. அவர் எடுத்துக் கொண்ட கட்சியை நிலைநாட்டத் தர்க்க ரீதியாகப் பேசினார்.

அவர் பேச்சில் இன்னொரு விசேஷ மிருந்தது. அதாவது, பிறரை 'இமிடேட்' பண்ணாமல் சொந்த பாணியிலேயே பேசியது தான். அக்காலத்தில் மேடையில் பேச விரும்பும் இளைஞர்கள்—அதிலும் கல்லூரி மாணவர்கள், மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஆற்காடு இராமசாமி முதலியார், சத்தியமூர்த்தி முதலிய பிரபல பேச்சாளர்கள் பாணியில் பேசிப் பழகுவது வழக்கம். பேச்சை மட்டுமல்ல; பிரபல பேச்சாளர்கள் பேசும் போது செய்யும் அங்க சேஷ்டைகள் நடையுடை பாவனைகளையும் 'இமிடேட்' செய்பவர்கள் கூட இருந்தனர். ஆனால் "அந்த ஆள்" அவ்வாறு செய்தவரல்ல. அவர் தான் நம் அண்ணா.

அண்ணா எதிர்த்துப் பேசிய கட்சி எனக்குப் பிடிக்காவிட்டாலும் அவருடைய பேச்சு வன்மை, பேசிய முறை, தர்க்க வாதம் எல்லாம் என்னை முற்றும் கவர்ந்தன.

கல்லூரி விவாத சபைகளில் கலந்து பேசத் தொடங்கியபோதே அண்ணா ஆங்கிலத்தில் தான் பேசிவரலானார். பொது வாழ்வில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கிய பின்னர் தான் தமிழிலும் பேசலானார். நாளடைவில், அநேகமாக தமிழிலேயே பேசக்கூடிய நிலை அவருக்கு வந்துவிட்டது. தமிழ் நாட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசக் கூடிய மிகச் சிலரில் அண்ணா, குறிப்பிடத் தக்கவரானார்.

தமிழில் பேசக்கூடிய நிர்ப்பந்தம் அண்ணாவுக்கு ஏற்பட்டது 1936-ஆம்.

(9-ம் பக்கம் பார்க்க)

# அண்ணாவின் கலைத் தொண்டு

## டி. கே. சண்முகம்

அறிஞர் அண்ணா அவர்கள் நாடகக் கலையிலே மிகுந்த ஆர்வம் கொண்டவர். இயல்பாகவே கலையுள்ளம் படைத்தவர். 1937 முதல் எங்களுடைய நாடகங்கள் பலவற்றையும் அவர் பார்த்திருக்கிறார்;

இராமாயணம், கந்தலீலா, பதிபக்தி, பம்பாய் மெயில், தேசபக்தி, குமாஸ்தாவின் பெண், வித்யாசாகரர், ஔவையார் முதலிய எல்லா நாடகங்களையும் அவர் ஒரு முறையல்ல பல முறை பார்த்துப் பாராட்டியிருக்கிறார். குமஸ்தாவின் பெண் நாடகத்திலே அவருக்குத் தனியாக ஒரு பற்று ஏற்பட்டிருந்தது. அந்நாடகத்திற்கு ஒரு நீண்ட விமரிசனம் எழுதினார். அப்போது அவர் பெரியார் ஈ. வே. ரா அவர்களின் 'விடுதலை'ப் பத்திரிகையிலே துணை ஆசிரியராக இருந்தார்.

1939 இல் 'விடுதலை' இதழில் வெளிவந்த அந்த நாடக விமர்சனம் நாடக விமர்சனத்திற்கே ஒரு இலக்கணமாக அமைந்தது. நானறிந்த வகையில் நாடகத்துக்கு அவ்வாறு ஒரு நீண்ட விமர்சனம் அதற்கு முன்பு யாரும் எழுதியதில்லை. மிக அருமையான விமர்சனம் அது. அண்மையில் நாங்கள் வெளியிட்ட சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா மலரில் அந்த விமர்சனத்தை வெளியிட்டிருக்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய கலையுள்ளமும், உயரிய ஆய்வுத் திறனும் அதைப் படித்தால் தெரியும்.

நாங்கள் ஈரோட்டை விட்டுப் புறப்பட்டபோது பெரியார் அவர்களிடம் விடை பெறச் சென்றோம். அண்ணா அவர்களும் உடனிருந்தார். அப்போது பெரியார் 'என்ன? அண்ணாதுரைக்கு நாடகப் பைத்தியத்தை உண்டாக்கி விட்டீர்களே, அவரும் உங்களோடு வந்துவிடுவார் போலிருக்கிறதே?' என்று சிரித்துக்கொண்டே கூறினார். ஆம்; உண்மையில் அண்ணா அவர்கள் எங்கள் பிரிவிற்காக மிகவும் கவலைப்பட்டார். ஈரோடு நிலையத்தில் அவர் எங்களை வழியனுப்பிய போது எங்களிருவரின் கண்களும் கலங்கின. அந்த அளவுக்கு அவர் நாடகக் கலையிலே உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தார். நாடகங்களின் மூலம் மகத்தான சாதனைகளைச் செய்ய லாமென்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

1939இல் 'குமாஸ்தாவின் பெண் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்' என்னும் தலைப்பில் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நாவல் 'திராவிட நாடு' இதழில் எழுதினார். அது எங்கள் குமஸ்தாவின் பெண் நாடகத்தை அடிப்படையாகக் கொண்ட கதை. நாடகத்தின் இறுதியில் கதாநாயகி சீதா விஷம் அருந்தி தற்கொலை செய்து கொள்கிறாள். முடிவு அப்படியிருக்கக் கூடாதென்பது அண்ணா அவர்களின் கருத்து. அதறகாகவே அந்த நாவலை எழுதினார். நாடகத்தின் முடிவு எப்படி இருக்க வேண்டுமென்பதை எடுத்து காட்டுவதற்காகவே எழுதப்பெற்ற நாவல் ஆனதால் அதற்கு நானே முன்னுரை எழுத வேண்டுமென்று கேட்டார்.

நான் பாலக்காட்டிலிருந்த போது முன்னுரை எழுதியனுப்பினேன். ஒரு நீண்ட முன்னுரை அது. அதில் குறிப்பிட்டிருந்த முதல் வாக்கியம் இப்போதும் என் நினைவில் இருக்கிறது. அப்போது அண்ணா அவர்கட்கு அறிஞர் என்ற அடைமொழி இல்லாத காலம். முன்னுரையில்,

'தோழர் அண்ணாதுரை அவர்கள் வருங்காலத் தமிழர் தலைவர்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

அந்த வாக்கியம் ஒரு தீர்க்க தரிசனமாக இன்று அமைந்துள்ளது. அவ்வாறு நான் குறிப்பிட்டதற்காக அன்று என் மீது கோபித்துக் கொண்ட நண்பர்கள் பலருண்டு. அவர்களிலே சிலர் இன்னும் இருக்கிறார்கள்' அவ்வாறு நான் குறிப்பிட்டதற்கு முக்கிய காரணம் அண்ணா அவர்களின் சொல் வன்மையிலும், எழுத்தாற்றலிலும் எனக்கு ஏற்பட்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான்.

1943இல், நாங்கள் ஈரோட்டிற்குப் போனபோது தான் அண்ணா அவர்களின் நாடகத் திறமையை அறியும் வாய்ப்புக் கிட்டியது. அதற்கு முன் அவரது கலை உள்ளத்தை, நாடக ரசனையை, நாடகத்தை விமர்சிக்கும் திறனைமட்டும் அறிந்திருந்தோம். இம்முறை நாடகம் எழுதும் திறமையையும் நடிப்பு சூழ் நிலையும் அறிந்து மகிழ முடிந்தது. அண்ணா அவர்களின் "சந்திரோதயம்' என்னும் நாடகம் நாங்கள் நடித்துவந்த மேடையிலேயே — எங்கள் காட்சிகளிலேயே நடைபெற்றது, அன்று பெரியார் அவர்கள் தலைமை தாங்கினார். என்னையும் பேசச் சொன்னார், நான் பேசினேன்.

'அண்ணா அவர்கள் நிரந்தரமாக நடிக்கத் தொடங்கி விட்டார். எங்களுக்கெல்லாம் ஆபத்துத்தான் போலிருக்கிறது' என்று கூறினேன். சந்திரோதயம் நாடகத்தில் அண்ணா ஒரு ஜமீந்தாரராகத் தோன்றி நடித்தார். பெரும்பாலான ஜமீந்தாரர்களிடம் என்னென்ன குணமிருக்குமோ அவற்றையெல்லாம் அப்பட்டமாக வெளிப்படுத்தி நடித்தார் அண்ணா. நாங்கள் கலைத் துறையில் ஜமீந்தார்களோடு மிக நெருங்கிப் பழகியவர்கள். ஆதலால் அந்த நடிப்பைப் பிரமாதமாக ரசித்தோம்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் நாடகம் எழுதித் தருமாறு நான் பல முறை கேட்டிருக்கிறேன். 'சந்திரோதயம்' போன்ற நாடகங்களை நாங்கள் நடிக்க இயலாது; சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த நாடகங்களை எழுதிக் கொடுங்கள். நடிக்கிறோம். என்று கூறிக் கேட்டிருக்கிறேன். ஆனால் எங்களுக்கு அந்த வாய்ப்புக் கிட்டவில்லை.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமிக்கு அந்த வாய்ப்புக் கிட்டியது. கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் சிறைச்சாலை சென்றதும் கே. ஆர். இராமசாமி அவர்கள் கிருஷ்ணன் நாடக சபையைத் தோற்றுவித்ததும் அந்த நெருக்கடியான சூழ்நிலையில் அவருக்குப் புதிய நாடகங்கள் தேவைப்பட்டன. அப்போது தோன்றியதுதான் அறிஞர் அண்ணா அவர்களின் 'ஓர் இரவு', 'வேலைக்காரி' ஆகிய நாடகங்கள்.

இவ்விரு நாடகங்களும் அந்நாளில் நாடக உலகில் ஒரு புரட்சியைத் தோற்றுவித்தன. நாடகங்களைக் கண்டு மகிழ்ந்த கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அருமையான விமர்சனங்கள் வரைந்து பாராட்டினார். 'தமிழ் நாட்டில் ஒரு பெர்னார்ட்ஷா தோன்றி விட்டார்' என அறிஞர் அண்ணாவை புகழ்ந்து கூறினார்.

அண்ணா அவர்களின் நாடக உரையாடல்கள் குறிப்பிடத் தக்கவை. உணர்ச்சியும், எழுச்சியும் ஊட்டுபவை. சுரீரென்று நெஞ்சில் தைக்கும் தன்மையில் சின்னஞ்சிறு வாக்கியங்களிலே அமைந்துள்ளது. அந்த உரையாடல்களின் அழகிலும், கருத்திலும் மயங்கியவர்கள் பலர். அந்தப் புதிய நடை தமிழறிந்த பலரையும் கவர்ந்தது. அதனால் 'தான் அண்ணா அவர்களைப் பின்பற்றி ஒரு எழுத்தாளர் பரம்பரையே தோன்றியுள்ளது.

அதன் பின் அண்ணா அவர்கள். எழுதி நடித்த 'சந்திரமோகன்' 'நீதிதேவன் மயக்கம்' ஆகிய பிரசார நாடகங்களையும் நான் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். சந்திரமோகன் நாடகத்தில் 'காகபட்டர்' வேடத்தில் அண்ணாவைப் பார்த்தவர்கள் இன்றும் மறக்க முடியாது; சந்திரமோகன் ஆர்ப்பாட்டத்தோடும் ஆவேசத்தோடும் துள்ளிக் குதிப்பதும் காகபட்டர் அமைதியாக ஆசனத்தில் அமர்ந்தவாறே 'சிவாஜிக்கு முடிசூட்ட இயலாது' என்று பதிலுரைப்பதும் காணவேண்டிய அற்புதமான காட்சி. அந்தக் கட்டத்திலே அண்ணா அவர்களின் நடிப்பு உச்சக் கட்டத்திலிருந்தது என்றே சொல்ல வேண்டும்;

'நீதிதேவன் மயக்கத்தில்' அவர் இராவணனாக கூண்டில் நின்று வழக்குரைப்பதும், நீதி கேட்பதும், இறுதியில் நீதிதேவன் மயங்கி விழுவதும் எல்லாம் மக்களிடையே ஒரு புதிய உணர்வை உண்டாக்கின என்பதில் ஐயமில்லை;

## வேறு வழியில்லை!

உங்களுடைய தாய் மொழி உங்களுடைய தந்தையர் மொழி—தலைமுறை தலைமுறையாக நமக்கென்று இருக்கின்ற மொழி- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே எந்த மொழி வந்தாலும் இந்த மொழி போகாது என்று புலவர்கள் உறுதியாகச் சொல்லத்தக்க பலம் பொருந்திய இந்தமொழி இழுக்காக நடத்தப்படுகின்ற இந்த நேரத்தில்—வட நாட்டிலே உள்ளவர்கள் இந்திக்கு காட்டுகின்ற ஆர்வம், ஆவேசம் பிடிவாத உணர்ச்சி நம்மிலே யாருக்கும் வரவில்லையானால் தமிழன் என்ற பட்டியலிலிருந்து நம்முடைய பெயரை நீக்கிக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை.


—அறிஞர் அண்ணா

டேவிட் பிரவுண் ட்ராக்டர்களுக்கு ஏக விற்பனையாளர்களாக ரோலன்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிடெட் தாபனத்தினர் நியமிக்கபட்டதிலிருந்து இயந்திர சாதனத்துறையில் இலங்கையின் விவசாய முன்னேற்றத்துக்கு இத்தாபனம் பெரும்பணியாற்றியுள்ளது. அண்மைக் காலத்தில் ஸ்மிடோரோ சோஹிகைசா லிமிட் தாபனத்தின் இலங்கை ஏஜன்டான சிலோன் என்ஜினியரிங் லிமிடெட்டுக்கு ட்ராக்டர்களையும், டிரெயிலர்களையும் ரோலண்ஷ் (ட்ராக்டர்ஸ் லிமிடெட் கையளித்தது.



படத்தில, சிலோன் என்ஜினியரிங் லிமிடெட் அதிபர் திரு. எரிக்சூஸா ரோலவன்ஸ் விற்பனை அதிபர் திரு. ஆப்ரே, டியூட்ரமிட மிருந்து ட்ராக்டர்களுக்கான சாவிகளைப் பெற்றுச் கொள்வதைக் காணலாம்' சிலோன் என்ஜினியரிங் லிமிடெட் தாபனத்தின் போக்குவரத்துப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள அனெஸ்லி டி சில்வாவும் படத்தில் காணப்படுகிறார்


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

# யானை மார்க் சிவப்பு, கறுப்பு போத்தல் மூடிப் போட்டி

இரண்டாங் கட்டம்



## பரிசுகளாக ரூ. 75,000/- க்கும் மேற்பட்ட தொகை.

## 1ஆம் பரிசு ரூ. 1,500/- 2ஆம் பரிசு ரூ. 1,000/-

## 3ஆம் பரிசு ரூ. 750/- 4ஆம் பரிசு ரூ. 500/-

## 5ஆம் பரிசு ரூ. 350/- 6 முதல் 250 ஆவது வரை தலா ரூ. 200/-.




## மற்றும் 50 (ஐம்பது) பரிசுகள் ரூ. 200/- பெறுமதியான விளையாட்டு

## உபகரணங்களுக்குரிய உறுதிச் சீட்டுகள் பாடசாலைகளுக்கு!

தலா ரூ. 50/- கொண்ட 250 விற்பனையாளர் பரிசுகள்

**விதிகள்**

1. பிரவேசப்பத்திரத்தில் "எலிபன்ட் ஹவுஸ்" பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைக் கவனமாகப் படித்த பின்னர் அதிற் காணப்படும் 14 வகை யானை மார்க் குளிர் பானங்களினதும் பெயரின் கீழ் கோடிடவும்.
2. இந்தப் பெயர்களைக் கீழே காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிப் பத்திரம் போன்ற சதுரக் கூடுகள் இரண்டிலும் நேர் வரிசைக் கிரமமாக நிரப்பவும். பெயர்களுக்குத் துணையாகஅக்கூடுகளில் அச்சிடப்பட்டிருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தவும்.
3. இனி கீழ்க் கண்டவாறு, ஒவ்வொரு கூட்டிலுமுள்ள எல்லா எழுத்துக்களுக்கும் பொருந்தக் கூடியதாக யானை மார்க் போத்தல் மூடிகளைச் சேகரிக்கவும்.



கறுப்புப் பந்திக்கு: நீங்கள் நிரப்பும் எழுத்துக்களுடன் இணையக்கூடிய கறுப்பு எழுத்துக்கொண்ட மூடிகளையும் அச்சிடப்பட்டிருக்கும் எழுத்துக்களுடன் இணையக் கூடிய சிவப்பு எழுத்துக் கொண்ட மூடிகளையும் சேகரிக்கவும்.

சிவப்புப் பந்திக்கு: மேற்சொன்னதற்கு எதிர்மாறாகச் சேகரிக்கவும். அதாவது, நீங்கள் நிரப்பும் எழுத்துக்களுக்கு சிவப்பு எழுத்துமூடிகளையும் அச்சிடப்பட்ட எழுத்துக்களுக்கு கறுப்பு எழுத்து மூடிகளையும் சேகரிக்கவும்.

குறிப்பு: எழுத்து ஏதும் அற்ற மூடிகளை அல்லது "எலிபன்ட் பிராண்ட்" என்ற வாசகமுள்ள மூடிகளைப் புறக்கணிக்கவும்.

4. இவ்வாறாக 124 சிவப்பு எழுத்து மூடிகளையும் 124 கறுப்பு எழுத்து மூடிகளையும் சேகரித்த பின்னர், பூர்த்தியாக்கப்பட்ட பிரவேசப் பத்திரத்துடன் (சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட்) எலிபன்ட் ஹவுஸ் விற்பனை/விளம்பர முகாமையாளரிடம் அவற்றைக் கொண்டு வந்து கொடுக்கவும். முதலாவது கையளிக்கப்படும் முற்றும் சரியான பிரவேசத்துக்கு முதற் பரிசு கிடைக்கும். இப்படியே 250 பரிசுகளும் முடியும் வரை நடைபெறும். தபாலில் அனுப்பப்படும் பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பாடசாலைகளுக்குரிய பரிசுகள்: 18 வயதுக்குட்பட்ட மாணவப் போட்டியாளரில் பரிசு பெறும் முதல் 50 பேரும் டயஸ் ஸ்தாபனத்தில் கொடுத்து ரூ. 200/-க்கு தமது பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் பெறக் கூடிய வவுச்சர்களையும்பெறுவர். இந்த வவுச்சர்கள் அவரவர் பாடசாலைகளின் பேரில் வழங்கப்படும். பாடசாலை அதிபரிடமிருந்து போட்டியில் பரிசு பெறும் மாணவரின் வயது சரியென அத்தாட்சிப்படுத்தும் கடிதமொன்றனைப் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.


- - - - - பிரவேசப்பத்திரம் - - - - - இங்கே வெட்டுக - - - - -

**கட்டுரை — எலிபன்ட் ஹவுஸ் பற்றிய உண்மைகள்**

75 வருடம் நிரம்பப்பெற்ற கம்பனியாகிய சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்டின் தலைமைக் காரியாலயமே எலிபன்ட் ஹவுஸ். இக் கம்பனிக்கு கண்டியிலும் திருகோணமலையிலும் கிளைகள் உண்டு. பவுண்டன் கபே இக் கம்பனிக்குச் சொந்தமானது. தெல்தேனியா, விக்டோரியா எஸ்டேட்டில் அமைந்திருக்கும் இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை கால்நடைப்பண்ணையும் இக் கம்பனிக்குச் சொந்தமானது. யானை மார்க குளிர் பானங்கள் யாவும் உயரிய தரச் சிறப்புக்கும் சுத்தத்திற்கும் பெயர் பெற்றவை. இவற்றில் ஒரேஞ் பார்ளி வெகு பிரசித்தமானது. கம்பனியின் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் இலங்கையிலுள்ள மிகப் பெரியதும் மிகச் சிறந்ததுமாகும். ஆகவே அதன் சோடா (Soda) அதி சிறந்ததெனப் பாராட்டப்படுதல் இயல்பே. லெமனேட் (Lemonade) போன்ற யானை மார்க் குளிர் பானங்கள் எப்பொழுதும் பெரிய போத்தல்களில் வழங்கப்படுகின்றன. எனவே சிக்கனமான குடும்பப் பெண்கள் இவற்றைப் பெரிதும் விரும்புகிறார்கள். இதற்கிடையில் ஒரு விஷயம்; லெமனேட் இப்பொழுது கூடுதல் இனிப்புச் சுவையுடன் வருகிறது. குடும்பப் பெண்கள் இப்பொழுது பேயாவ (Peyawa) வையும் வீட்டில் கையிருப்பில் வைத்திருக்க முற்பட்டுள்ளார்கள். ஏனென்றால், சுகாதார முறைப்படி தயாரிக்கப்படும் இந்தக் குளிர்பானம், தடிமல், இருமல், தலையிடி, தேக உளேர்சல், காய்ச்சல் ஆகியவற்றைக் கண்டிக்கக் கூடிய ஔடதங்களை உள்ளடக்கியதாகும்.

போத்தலில் பால் அடைக்கும் மிகப்பெரிய இயந்திரம் எலிபன்ட் ஹவுஸில் உண்டு. உயர் ரக பழச் சாறுகள், பழரசங்களையும் எலிபன்ட் ஹவுஸ் தயாரிக்கிறது. இப் பழ ரசங்களில் ஒரேஞ் (Orange), பிளாக் கரன்ட் (Black Current), லெமன் (Lemon), கிரேப் புருட் (Grape Fruit) பஷோனு (Passiona) ஆகியனவும் லங்கா லைம் (Lanka Lime), லைம் ஜுஸ் அன்ட் சோடா (Lime Juice & Soda) முதலியன தயாரிக்கப் பயன்படும் எலுமிச்சை சாறும் அடங்கும். எலிபன்ட் ஹவுஸ் இருபதுக்கு மதிக வகை, சுவையான ஐஸ் கிறீம்களைத் தயாரிக்கிறது. இவை வெகு துப்புரவானவை, போஷாக்கு சிறந்தவை எனப் பெயர் பெற்றுள்ளன. பத்து சத ஐஸ் பழம் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொன்றாகும். எலிபன்ட் ஹவுஸின் மற்றுமொரு புதிய தயாரிப்பு தேன் சுவைக் கோல்டன் சிரப் (Golden Syrup) ஆகும். பிற ருசிகளில் நாட்டமுள்ள வயதானவர்கள் தமது பானங்களுடன் கலப்பதற்கு யானை மார்க் டொனிக் (Tonic), ட்ரை ஜிஞ்ஜர் ஏல் ஆகியவற்றையே குறிப்பிட்டுக் கேட்கிறார்கள். பெண்களுக்கு மிகவும் பிடித்தமான பானம் பிற்றர் லெமன் (Bitter Lemon); மற்றொன்று புதிய, சீனிக் கலப்பற்ற ஸ்லிம் லைம் (Slim Lime).

குடும்பத்தின் உணவு சேமிப்பு அறைக்கென பல்வேறு சொசேஜ் ரகங்களை எலிபன்ட் ஹவுஸ் தயாரித்தளிக்கிறது; (போர்க், பீவ், மீன் முதலியன). சிப்பொலடாஸ், போக்கீஸ், டெவில்ட் பீவர்ஸ் மற்றும் புதிய ஸ்பைஸ்ட் லிங்குஸ் இப்படிப் பல. இரண்டு ரகமான பாக் அன்ட் ஸ்ட்ரீக்கி பேக்கன், ஸ்மோக்ட் ஹாம், சமைத்த ஹாம் இவற்றுடன் சலாமி, மதிய போசனத்துக்குரிய இறைச்சி, சான்ட்விச்சில் தடவி மகிழ்ச்சியோடு உண்ணக் கூடிய லிவர் பேற்றே போன்ற சமைத்த பண்டங்களையும் தயாரிக்கிறது.

எலிபன்ட் ஹவுஸுக்கு விஜயஞ் செய்வோர் இலங்கையின் மிகப்பெரிய ஐஸ் தொழிற்சாலையையும் கார்பன் டை ஒக்ஸைட் தொழிற்சாலையையும் காணலாம். பாடசாலை மாணவருக்கு எலிபன்ட் ஹவுஸுக்கு விஜயஞ் செய்தல் மகிழ்ச்சியும் அறிவும் ஊட்டக்கூடிய தொன்றாகும். அவர்களின் அபிமானத்துக்குரிய கடுஞ் சிவப்பு நெக்டோ (Necto) அல்லது நுரைத்தெழும் கிறீம் சோடா (Cream Soda) பானத்துடன் அவர்களுடைய விஜயம் முற்றுப்பெறும்.

நத்தார்க் காலத்தில், எலிபன்ட் ஹவுஸ், நத்தார் கேக், சொக்லேற் யூல் லொக் மற்றும் அவர்களது அதி விசேஷ நத்தார் புடிங், மின்ஸ் பைஸ் ஆகியவற்றோடு வழக்கமான சொக்லேற், டவ்டி, மதெரா, லவ், பட்டர், வெடிங் கேக் ஆகியவற்றையும் தயாரிக்கின்றனர்.

இராப்போசன விருந்துகள், டான்சுகள், கொக்டெயில் பார்டிகள் சிறுவர் விருந்து வைபவங்கள், திருமண வைபவங்கள், கிறிக்கெற் போட்டிகள் முதலியவற்றுக்கு முதற்தர விருந்து உபசரணைச் சேவை தேவைப்படும் போதெல்லாம் மக்கள் எலிபன்ட் ஹவுஸ் சேவையையே நாடுகின்றனர். இந்த வைபவங்களில் லங்கா ஒரேஞ் (Lanka Orange), ஜிஞ்ஜர் பியர் (Ginger Beer) ஆகியவற்றுக்கு மிகுந்த கிராக்கி உண்டு. கொழும்பின் குடும்ப உணவுச்சாலையாகிய பவுண்டன் கபேயிலும் விருந்து உணவு உபசரணை ஒரு தனிக் கலையாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த உணவுச்சாலையில் (2 பெரியவர்கள் 2 சிறுவர்கள்) நால்வர் அடங்கிய குடும்பத்துக்கு போயா தினங்களில் ரூ. 12/-க்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

கறுப்புப் பந்தி

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | D | | | | | | | | J | | | | | | | | | |
| | | | T | | | | | | | | | | | | E | | | | |
| | E | | | | | | | | | | | K | | | | | | | |
| | | | | | A | | | | | | | | G | | | | | | |
| | | | | A | | | | | | | | | | | | | O | | |
| | | T | | | | | | | | | | | | I | | | | | |
| | | | | G | | | | | | | | | | | | O | | | |

சிவப்புப் பந்தி

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | | | | | | | | | | | | | | | C | | |
| | | | | | | B | | | | | | | | | | Y | | | |
| | | N | | | | | | | | | | | | | | | | D | |
| | | | | | S | | | | | | | | | | | L | | | |
| | L | | | | | | | | | | | | | | | | M | | |
| | | N | | | | | | | | | | | | | R | | | | |
| | | D | | | | | | | | | | | | | | R | | | |

இந்தப் போட்டியில் சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், அதன் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள், கிரான்ட் அட்வேர்டைசிங் (இலங்கை) லிமிட்டெட், யுனிவேர்சல் மெற்றல் கிரவுண் கோர்க் கம்பனி ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியரோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றலாகாது.

இந்தப் போட்டியின் முடிவுகள் பற்றி எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்) எலிபன்ட் ஹவுஸ் நிர்வாகிகளின் தீர்ப்பே முடிவானது.

போட்டியாளர் பெயர் ..............................

விலாசம் ..............................

18 வயதுக்குட்பட்டவராயின்

(அ) வயது

(ஆ) பாடசாலை

..............................

யானை மார்க் குளிர் பானங்களைக் கிரமமாக உங்களுக்கு விற்பவர்

பெயர் ..............................

அவருடைய கடை, கிளப், சினிமா மதுச்சாலை, வாடி வீடு, கன்டீன் அல்லது அத்தகைய விற்பனை முனை அல்லது வியாபாரியின் விலாசம் —

..............................

விற்பனையாளருக்குரிய தலா ரூ. 50/- கொண்ட 250 பரிசுகள் பரிசீலனையின் பின்னர் வழங்கப்படும்


எலிபன்ட் ஹவுஸ்

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்

கொழும்பு — கண்டி — திருகோணமலை.


- - - இங்கே வெட்டுக - - - - -

# 'தினபதி என்னும் கழிசறை ஏட்டின் வேசித்தனம்!

குணசேன நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டு வரும் 'தினபதி' என்னும் கழிசறை ஏடும் அதன் ஆசிரியரும் தமிழரசுக்கட்சித் தலைவர்களுக் கெதிராகவும், தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகவும் அப்பட்டமான பொய்ச் செய்திகளையும் கற்பனைச் செய்திகளையும் அடிக்கடி வெளியிட்டு வருவதையும் அப்போதெல்லாம் சுதந்திரன் அந்த ஏட்டையும் அதன் ஆசிரியரையும் சந்திக்கிழுத்து—முகமூடியைக் கிழித்தெறிந்து உண்மையை அம்பலமாக்கி வந்திருப்பதையும தமிழ் மக்கள் அறிவார்கள்.

இப்போது பத்திரிகாதர்மங்களையெல்லாம் ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டு— வேசித்தனத்தின் உச்சக் கட்டமாக — உலகெங்கும் வாழும் ஆறுகோடி தமிழ்மக்களின் ஈடிணையற்ற தலைவராகிய மறைந்த பேரறிஞர் அண்ணாமீது தமிழரசுத் தலைவர்கள் அபாண்டம் சுமத்தியதாக முழுப் பொய்ச் செய்திகளைப் பிரசுரிப்பதன் மூலம், ஈழத்தமிழ் மக்களிடையேயும் தி.மு. கழகத் தலைவர்கள் மத்தியிலும் தமிழரசுத் தலைவர்கள்மீது வெறுப்பை ஏற்படுத்தி விடலாம் என்று கனவு காணுகிறார் தினபதி' ஆசிரியர். ஆனால் இப்படியொரு பொய்ச்செய்தியை வெளியிட்ட தன் மூலம் ஈழத் தமிழினம் முழுமைக்கே 'தினபதி' ஆசிரியர் இழுக்கு தேடிவிட்டார் என்று நாம் குற்றம்சாட்டுகிறோம்.

தினபதி என்னும் சாக்கடை ஏட்டில் சாக்கடை நீரால் அதன் ஆசிரியர் எப்படித்தான் எழுதினாலும், தினபதியில் வரும் ஒவ்வொரு எழுத்துமே பொய் என்பதை இந்நாட்டு தமிழ் மக்கள் தெளிவாக தெரிந்து வைத்திருக்கிறார்கள். இதைத் தமிழ் நாட்டு மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

அண்ணன் மறைவு பற்றி ஓர் ஆசிரியத் தலையங்கம் எழுதி தனது அனுதாபத்தைக் காட்ட முன்வராத 'தினபதி'— அண்ணாவுக்கு இலங்கைப்பாராளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லையே என்று அழுவதில் உள்ள நச்சு நோக்கத்தை தமிழ் மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

அதே வேளையில் தினபதியின் சகோதரப் பத்திரிகையான 'சன்' 'தவச' போன்ற ஏடுகள் அண்ணாவை வகுப்புவாதியென்றும் இனவெறியர் என்றும் எழுதிவருவதையும் தமிழ் மக்கள் கவனித்து வருகிறார்கள்.

அண்ணா மறைந்ததைப் பற்றி தினபதியின் சகோதரப் பத்திரிகைகள் உள்ளூர மகிழும்போது 'தினபதி' அண்ணாவுக்குவடிக்கும் மாய்மாலக் கண்ணீர் கண்டு தமிழ் மக்கள் சிரிப்பாய்ச் சிரிக்கிறார்கள்.

யதாக பரபரப்பூட்டும் முழுப்பொய்ச் செய்தியை வெளியிட்டு தினபதி தனது இழிதன்மையைக் காட்டி விட்டது.

பண்டிதர் இரத்தினம் மட்டுமல்ல தமிழரசுத் தலைவர்கள் ஒவ்வொருவருமே அண்ணாவை இழந்த துயரத்திலிருந்து இன்னும்விடுபடாமலிருக்கிறார்கள். அண்ணா மீது தமிழரசுத் தலைவர்கள் மட்டுமன்றி இந்நாட்டுத் தமிழ் மக்கள் அனைவருமே அளவிடற்கரிய பற்றும் பாசமும் வைத்திருக்கிறார்கள்.

அண்ணனை இழந்து தமிழுலகம் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில்—அண்ணாவின் அரசியல் எதிரிகள் கூட அவரது பெருமை பேசும் இச்சந்தர்ப்பத்தில்-அண்ணன் வழியைச் அடியொற்றிவரும் பண்டிதர் இரத்தினமும்-அண்ணாவின் எழுத்துக்களால் உணர்ச்சி வசப்பட்டு அரசியலுக்கு வந்த திரு. அமிர்தலிங்கமும், தர்மலிங்கமும்- அண்ணாவை அதுவும் அவர் மறைந்த பின்னர்-குறைத்து கூறியதாக 'தின



பதி' செய்தி வெளியிடுகிற தென்றால், 'தினபதி' ஆசிரியருக்கு ஏதாவது ''மேல் வீட்டில்'' கோளாறு இருக்கும் என்று தமிழ் மக்கள் கருதுவார்களே தவிர அச் செய்தியை ஒரு போதுமே நம்பமாட்டார்கள்.

அண்ணாவைப் பிரிந்து தமிழ் மக்கள் கதறியழும் இந்நேரத்தில் — தமிழ் மக்களின் மனங்களிலெல்லாம் அண்ணா கொலுவிருக்கும் நேரத்தில் அண்ணாவைப் பற்றி தமிழரசு எம். பி.க்கள் சிலர் குறைத்து மதிப்பிடுவதாக ஓர் பொய்யைப் பரப்புவ

## 'தினபதி' தீக்கிரை

அறிஞர் அண்ணா அவர்கள் பாராளுமன்ற அஞ்சலிக்கு அருகதையற்றவர் என்று கிளிநொச்சி பா. உ. பண்டிதர் இரத்தினம் கூறியதாகபொய்ச்செய்தியை தாங்கி வெளிவந்த 'தினபதி' இதழ்கள் கிளிநொச்சித் தொகுதியில் திக்கிரையாக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கிளிநொச்சி கண்டி வீதி கரடிப் போக்குச் சந்தியில் வைத்து 'தினபதி'யை தகனம் செய்தனர். கிளிநொச்சி ப. ச. தலைவர் திரு. க. கந்தையாவும் இதில் கலந்து கொண்டார். எரித்தபின் சாம்பலை வாய்க்காலில் போட்டனர்.

''தமிழ் நாட்டுமக்களே! திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே! 'பாம்புக்கும் வாலும் மீனுக்கு தலையும் காட்டும் 'தினபதி' செய்திகளை சிறிதும் நம்பாதீர்கள். ஈழத்தமிழ் மக்கள் தினபதியை 'பொய்பதி' என்றே கருதுகிறார்கள்: எப்படி தமிழ் நாட்டில் உள்ள சில தினசரிகள் தி. மு. கழகத்துள் கலாம் விளைக்கவும், தூண்டிவிடவும் கழகம் பற்றி பொய்ச் செய்திகளை வெளியிடுகின்றன வோ அதே போலத்தான் ஈழத்திலும், ஈழத்தமிழர்களின் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சியை அழிக்கவும், உங்களுக்கும் எங்களுக்குமிடையே இருக்கும் பாசத்தொடர்பை சுக்கு நூறுக்கி விட

# அண்ணாவைப் பற்றிய பொய்ச் செய்தியால் ஈழத் தமிழினம் முழுவதற்குமே அவமானம்!

குணசேன நிறுவனத்திலிருந்து வெளிவரும் ஏடுகள், இந்நாட்டிலே தமிழினத்தைக் குழிதோண்டிப் புதைக்கவும் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தை உடைக்கவும், தமிழரசுக் கட்சியினரைப் பிரித்துப் பிளவுபடுத்தி மக்களிடம் அவர்களுக்கிருக்கும் செல்வாக்கை நாசப்படுத்தவும் பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டு வருவது நாட்டு மக்கள் அறிந்ததே.

தி. மு. க. வுக்கும் அறிஞர் அண்ணாவுக்கும் எதிராக இந்த ஏடுகள் நடத்தி வரும் பொய்ப் பிரசாரங்களும் கக்கிவரும் நச்சுப் புகையும் கொஞ்ச நஞ்சமல்ல.

'தவச' 'சவச' போன்ற ஏடுகள் சிங்களத்திலும், 'சன்' ஆங்கிலத்திலும் இந்த வேலையை நேரடியாகச் செய்து வருகின்றன. ஆனால் 'தினபதியோ' வேறு விதமாக இதைச் செய்து வருகிறது.

தமிழரசுக் கட்சியினரைப் பற்றி எள்ளளவும்உண்மைக் கலப்பற்ற பொய்ச் செய்திகளை அலுவலகத்திலேயே உருவாக்கி வெளியிட்டு தமிழ் மக்கள் மத்தியிலே குழப்பத்தை உண்டாக்கி, கட்சி மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை சிதறடித்து விடலாம் என தினபதி மனப்பால் குடித்து வருகிறது.

தினபதியின் இக்கீழ்த்தரப் போக்கை சுதந்திரன் சந்திக்கிழுத்து பல தடவைகளில் அம்பலப்படுத்தி வந்திருக்கிறது. இதனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் 'தினபதி' இன்று 'பொய்ப்பதி' ஆகிவிட்டது.

### கறை

ஆனால் தினபதி செய்து வந்த துரோகங்களுக்கெல்லாம் முடி சூட்டியதுபோல தமிழரசுத் தலைவர்களைப் பற்றி ஒரு மாபெரும் பொய்ச் செய்தியை கடந்த வாரம் வெளியிட்டு ஈழ தமிழினம் முழுவதற்குமே கறையைத் தேடித்தந்திருக்கிறது.

அண்ணா மறைந்ததனால் ஏற்பட்ட துயரம் இன்னும் கொஞ்சம் கூட ஆறவில்லை. நாடெங்கும் அண்ணனை நினைத்து நினைந்து மக்கள் உருகியபடி இருக்கிறார்கள். இந்தப் பரிதாப சூழ் நிலையைக் கூட தனது வஞ்சத்துக்கு உபயோகப்படுத்தி தமிழரசுத் தலைவர்கள் மீது களங்கத்தை ஏற்படுத்திவிடும் இழிந்த நோக்குடன் கடந்த வாரம ஓர் பொய்ச் செய்தியை தினபதி வெளியிட்டிருக்கிறது.

### ஈனத்தனம்

உலகத் தமிழ் மக்களின் ஒப்பெற்ற தலைவராகிய அண்ணன் மறைவு பற்றி ஓர் ஆசிரியத்தலையங்கம் தீட்டி அஞ்சலி செலுத்த முன்வராத 'தினபதி'யின் ஆசிரியர் அண்ணன் மறைவையும் துரோகத்துக்கு பயன்படுத்தியிருப்பது ஈனத்தனமானது, வெட்கப்படத்தக்கது; கண்டிக்கப்படவேண்டியது.

அண்ணன் மறைவுக்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் அனுதாபத்தீர்மானம் கொண்டுவரப்படாததேன் என்ற ஓர் பிரச்சினையை தானே கிளப்பி, அதற்கு தமிழரசு பாராளுமன்ற

# அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தி ஆசிரியத் தலையங்கம் தீட்ட வக்கற்ற தினபதி ஆசிரியரின் மாய்மாலம்!

உறுப்பினர்கள் கூறிய பதில்களென தானே அவற்றையும் சிருஷ்டித்து வெளியிட்டு வஞ்சம் தீர்க்க முனைந்திருக்கிறார் தினபதி ஆசிரியர்.

பாராளுமன்றத்தில் அனுதாபத்தீர்மானம் கொண்டு வர வேண்டிய அளவுக்கு அண்ணா தகுதியற்றவர் என்றும், இலங்கைத் தமிழர்களுக்காக அண்ணா என்ன செய்தார் என்றும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறி

சொன்னதாக 'தினபதி' வெளியிட்ட பொய்ச் செய்தியைப் படிக்கும் தமிழ் நாட்டார் என்ன நினைப்பார்கள்? எவ்வளவு ஆத்திரப்படுவார்கள்? தினபதியின் பொய்ச்செய்தியால் ஈழத்தமிழினம் முழுவதற்குமல்லவா களங்கம் ஏற்பட்டு விட்டது.

தன் மூலம் தமிழ் மக்களது ஆத்திரத்தை தமிழரசுக்கட்சின் மீது திசை திருப்பி விட முயலும் 'தினபதி' ஆசிரியரின் துரோகச் செயலை வேசித்தனம் என்று வர்ணிப்பதைத் தவிர வேறு வார்த்தை நமக்குகிடைக்கவில்லை.

ஈழத்தமிழ் மகன் ஒருவன் உலகம் போற்றும் பேரறிஞர் அண்ணாவைப் பற்றி தரங் குறைவாகச்

வும் 'தினபதி' சதிசெய்து வருகிறது. எனவே 'தினபதி'யின் பொய்ச் செய்திகளை கண்டு மனம் கலங்காதீர் எனஈழத்தமிழ்மக்களின் சார்பில்சுதந்திரன் கேட்டுக்கொள்ளுகிறது.

அண்ணாவின் பிரிவுக்கு பாராளுமன்றத்தில் தமிழரசு எம். பீக்கள் அனுதாப தீர்மானம் கொண்டு வராததற்கான காரணங்களை தமிழரசு எம். ஒருவர் தெரிவித்தார்.

(1) அண்ணா மறைந்தது பெப்ரவரி 3ந் - திகதி. 4ந் திகதி சுதந்திர தின விடுமுறை. பாராளுமன்றம் 5ம் திகதி கூடியது. 6ம் திகதி ஒத்தி வைக்கப்பட்டது. எனவே முறைப்படி அனுதாபத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுக்கப் போதிய அவகாசம் இருக்கவில்லை.

(2) அண்ணாவுக்கு அனுதாபத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தாலும், சகல சிங்கள எம். பீக்களும் அதை

(9-ம் பக்கம் பார்க்க)

# 20 ஆண்டுகளுக்கு முன் [17. 9. 49 ல்] சென்னை ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழைக்கிடையே திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடக்கி வைத்து அண்ணா ஆற்றிய உரை இது.

# அறிஞர் அண்ணாவின் தீர்க்கதரிசன உரை

நான்தான் காரணம் இந்த நிலைக்கு-ஏற்பாட்டுக்கு என்று கூறுவர் சிலர். நான் பேசுகிறேன் இப்போது நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்-பலத்தமழை பெய்து கொண்டிருக்கிறது - என்ன நினைக்கிறீர்கள்? இதற்கு நானா பொறுப்பாளி? நானா மழையை வரவேற்கிறேன்? வருவித்தேன்? இல்லை! இப்போது நான்எப்படி பொறுப்பாளியல்லவோ, அப்படித்தான், கழகத்தில் ஏற்பட்ட மந்த நிலைக்கும் செயலற்று கிடந்த நிலைக்கும் நான் பொறுப்பாளியல்ல. மழைக்கு நான் பொறுப்பாளியல்லவென்றாலும், என்னை ஏசுவர், கூட்டத்திற்கு வந்துள்ள மக்கள், தாய்மார்கள் "ஏனப்பா! அந்த அண்ணாதுரை கூட்டத்திற்கு போனேன்? ஒரே மழை நன்றாக நனைந்துவிட்டேன், நீர் சொட்டக் கேட்டுக் கொண்டிருந்தேன்" என்றுதான் பேசுவர்.

பெரியார் திருமணம்என்ற செய்தி கேட்டதும் அழுதவன் நான், ஆயாசங்கொண்டவன் நான், அதுமட்டுமல்ல, நான் ஒதுங்கிவிடுகிறேன் என்ற எண்ணத்தைக், கருத்தைத் தெரிவித்தவன் நான். பேதம், பிளவு, மனத்தாங்கல், மோதல் கூடாது, நல்லதன்று, என்று கருதும் போக்கும், மனப்பண்புமபடைத்தவன் நான். எனவே, என் வரையில் பெருந்தன்மையாகக் கட்சிப் பணியிலிருந்து விலகுவது நல்லது என்று முடிவுகட்டியிருந்தேன்.

என்போன்ற பல தோழர்கள் பெரியாரை, பெரியார் போக்கை, அவர் திருமண ஏற்பாட்டை ஏற்கவில்லை என்பதை மட்டுமல்ல, கண்டித்தனர். கதறினர் வேண்டாம் என்று வேதனை உள்ளத்தோடு.

நான்மனதார தீமைஎன்று கருதிய ஒன்றை, நல்லதல்லவென்று தெரிந்த ஒன்றை, பகுத்தறிவுக்குப் புறம்பானது என்று பாமரரும் ஒப்பும் ஒன்றைத் தெரிவித்தது குற்றமா?

பெரியார் சமாதானம் சொல்லிவிட்டார் என் சொந்த விஷயம், எதிர்ப்போர் சுயநலமிகள் - சதிக் கூட்டத்தினர் என்று, மனப்புண் ஆறவில்லை. மக்கள் அப்படிப்பட்ட தலைவருடன் சேர்ந்து பணியாற்றமாட்டோம் என்று கூறினர். செவிசாய்க்கவில்லை தலைவர். விலகுவார் என்று பார்த்தனர். விலகவும் இல்லை தலைவர். அவரோடு சேர்ந்து பணி புரிய முடியாது நிலையிலுள்ள மிகப் பெரும்பான்மையினர், கழக முக்கியஸ்தர்கள், கூடிப் பேசி ஒரு முடிவு செய்தனர். அந்த முடிவுதான் 'திராவிட முன்னேற்றக் கழக'த் தோற்றம்-போட்டிக் கழகமல்ல.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது! திராவிட கழகத்திற்குபோட்டியாக அல்ல, அதே கொள்கைப் பாதையில் தான் திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான். திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கொள்கைகளில், கருத்துக்களில்-மாறுதல், மோதுதல் எதுவும் கிடையாது. சமுதாய துறையிலே சீர்திருத்தம் பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள்; அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடுதலை-ஆகிய கொள்கைகள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும்.

திராவிட கழகம் எதற்காகப் பாடுபட்டதோ, எவருடைய நன்மைக்காக எந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, ஏழை எளியவர்களை எளிமையிலிருந்து வீடுவிக்க, வாழ வழியற்ற மக்களுக்கு வாழ்க்கைப் பாதை வகுத்துக்கொடுக்க, இல்லாமையை இல்லாததாக்க, கொடுமையை ஒழித்துக்கட்டி 'எல்லோரும் ஓர் குலம்' என்ற ஏற்பாட்டை வகுக்க ஏற்படுத்தப்பட்டதோ, அதே கொள்கை வழி நின்று, குறிக்கோளைப் புறக்கணிக்காது பாடுபட்டு வரும், திராவிட முன்னேற்றக் கழகம்.

ஒரு குடும்பத் தலைவன் சதா தன் மக்களில் சிலரைப் பார்த்து 'நீ சோம்பேறி, வேலைக்கு லாயக்கற்றவன், வீணன் என்று தூற்றிக் கொண்டே இருந்தால், மகன் நிலை என்னவாகும்? உண்மையிலேயே உழைக்கும் மகன் உள்ளம்உடைந்து தானே போவான்? அதுமட்டுமா, சற்று விவேகமும், ரோஷமும் படைத்த மைந்தன் வீட்டைவிட்டு வெளியேறி, தொழில் புரிந்து தன் நிலையை பலப்படுத்தி, தகப்பனைக் கூப்பிட்டு 'பார் அப்பா! வீணன் வேலைக்கு லாயக்கற்றவன், சோம்பேறி என்று கூறினீரே, பாரும் எனது திறத்தை! செயலாற்றவிடவில்லை நீர். சதா எல்லாவற்றையும் தூக்கிப்போட்டுக்கொண்டு எங்களை எரிச்சலோடு ஏசினீர். பாரும் எமது வேலையை, வேலையின் திறத்தை, வெற்றியை' என்றுதானே கூறுவான்? காட்டுவான்!

அதுபோலவேதான் நாமும் நம்மை மதியாத, இகழ்ந்த தூற்றலின் துச்சமென மதித்த தலைவரின் தலைமையை விட்டு வெளியேறித் தனிக் குடித்தனம், தனிமுகாம், தனிக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருக்கிறோம். நாம் உழைத்து உருவாக்குவோம் இந்த கழகத்தை.

நான்தான் அவரோடு பலத்த கருத்து வேற்றுமை கொண்டேன் என்றும், அவரைப் பிடிக்கவில்லை என்றும் பேசுவது தவறு; உண்மைக்குப் புறம்பானது. எனக்கு அவரோடு தொடர்பு ஏற்பட்டது 1935-ம் ஆண்டில் தான், அப்போது நான் பி. ஏ. பரீட்சை எழுதியிருந்தேன். பரீட்சை முடிவு தெரியாத நேரம் அது. அப்போது கோவைக்கடுத்த திருப்பூரில் ஓர் வாலிபர் மாநாடு நடந்தது. அங்குதான் பெரியாரும் நானும் முதல் முதலில் சந்தித்தது; எனக்கு பற்றும் பாசமும் ஏற்பட்டது. அவருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் எனக்குப்பெரிதும் பிடித்தன. பெரியார் என்னைப் பார்த்து 'என்ன செய்கிறாய்' என்று கேட்டார். 'படிக்கிறேன் பரீட்சை எழுதியிருக்கிறேன்' என்றேன். உத்தியோகம் பார்க்க விருப்பமில்லை. பொதுவாழ்வில் ஈடுபட விருப்பம் என்று பதிலளித்தேன். அன்று முதல் அவர் எனது தலைவர் ஆனார். நான் அவருக்குக் சுவீகாரப் புத்திரனாகிவிட்டேன். பொதுவாழ்வில் அன்றையிலிருந்து இன்றுவரை சுவீகாரப் பிள்ளைதான் நான் அவரது குடும்பத்தாருக்கு! இன்னும் கூட அந்தத் தொடர்புவிடவில்லை எனக்கும் அவருக்கும். ஏன்? அவருடைய அண்ணார் பிள்ளை சம்பத் என்னுடைய சுவீகாரப் பிள்ளை இப்போது! 14 ஆண்டுகள் அவரோடு பழகினேன். 14 ஆண்டுகள் பொதுவாழ்வில் இருக்கின்றேன்.

நான் மிக மிகத் தெளிவாகவே கூறிவிடுகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகம் எந்த விதத்திலும் திராவிடர் கழகத்திற்கு எதிரானதல்ல, எதிர்நோக்கம் கொண்டதுமல்ல, கொள்கை ஒன்றே. கோட்பாடும் ஒன்றே, அங்கிருந்தவரில் பெரும்பாலோர்தான் இங்கு இருக்கின்றனர். குடும்பத் தலைவரின் போக்குப் பிடிக்காத காரணத்தால், மக்கள் வேறு பண்ணையில் வசிக்கும் பண்பினைப்போல, தன்மையைப்போல, பகை உணர்ச்சி சற்றும் கிடையாது நமக்கு.

இக்கூட்டத்தின் இடையே மழை பொழிந்து சற்று சங்கடத்தைத் தருவதுபோல, இடையிடையே சிறு சிறு தூறல்கள் தூறலாம். நம்மிடையே - அது வார்த்தை வடிவிலே வரலாம்; விசாரப்படாதீர்கள். அதுவும் அந்தப் பக்கமிருந்துதான் வரலாம்;

எனது பீடத்தைக் காலி செய்துவிட்டேன். அங்கிருந்து நானாகவே. நான் விரும்பினால், விரும்பியிருந்தால் அங்கேயே இருந்திருக்கலாம், எல்லாவகை விருதுகளோடும். என் நிலை என்ன அங்கே சாமான்யமானதா? எளிதில்கிடைக்கக்கூடியதா? இல்லையே! அவர் அங்கே கடவுள் நிலையில் இருக்கிறார் என்றால், நான்தானே அர்ச்சகன்! அவர் தம்பிரான் என்றால், நான்தானே கட்டளைத் தம்பிரான்! அவர் தலைவர் - நான் தளபதி என்றுதான் போற்றப்பட்டேன். புகழப்பட்டேன். இன்று அவரது 'வாழ்க்கைத் துணை நலம்' ஆன மணியம்மையுங்கூட எனக்குத்தான் - மற்ற எவரையும்விட மரியாதை, வரவேற்பு காட்டியிருக்கிறார்கள். பெரியார் எழுதுவதாகக் கூறிய டிரஸ்டிலும் என்பெயர்தானே முதலில் இருந்திருக்கும்! நான் என்ன இவ்வளவு விருதையும், புகழையும் பாழ்படுத்திக் கொள்ள பித்தனா? வரட்டு ஜம்பம் பேசி, கழகத்தில் புகழ் வாழ்வைக் கெடுத்துக் கொள்ள - நான் என்ன வெறியனா? அல்லது இதை விட்டு வேறு வேலை நடத்த - குமாரசாமி ராஜாவிடம் ஏதாவது அப்ளிகேஷன் போட்டிருக்கிறேனா? அதுவும் இல்லையே! எனக்கு என்ன லாபம் ஏற்படும் என்று, அவரை கண்டிக்க வேண்டும்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

பெரியாரோடு நான் மாறுபட்ட கருத்துடையவன் என்று கூறப்படுகிறது. சிற்சில விஷயங்களிலே நான் மாறுபட்ட கருத்துக்கொண்டிருந்தாலும் நெடு நாட்களாகவே சில கருத்து வேறுபாடுகள் இருந்துவந்தாலும் அவைகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. முடிந்த அளவு ஒத்துழைத்தே வந்திருக்கிறேன். முடியாத நேரத்தில் மிக மிகக் கண்யமாக ஒதுங்கியே இருந்திருக்கிறேன், பெரியார் அவர் வழிபடியே கழகம் நடக்கும். பிறகு பார்த்துக்கொள்வோம் என்ற போக்கைக் கொண்டிருந்தவன்.

மற்றொரு காரணம் கூறப்படுகிறது. அதாவது நான் சுயநலத்துக்காகவே இந்தத் திருமண ஏற்பாட்டை எதிர்க்கிறேன் என்று. எனக்குத் திராவிடர் கழகத்திலே இருந்தபோது எந்த நலன் கெட்டுவிட்டது? ஒன்றும் கெடவில்லையே! நாடகம் எழுதாதே என்று தடுத்தாரா தலைவர், இல்லையே! சினிமாவுக்குக் கதை எழுதாதே! என்றுகண்டித்தாரா பெரியார் என்றாவது? கிடையாதே! சுயநலமாயிருந்தால் எனக்கு அங்கு இருப்பதால் என்ன கெட்டுவிட்டது? ஒன்றும் கெடவில்லை! சிற்சில சமயம் தலைவர் போக்கு பிடிக்காதிருக்கலாம். அவர் கருத்து எனக்கு பிடிக்காது இருந்திருக்கலாம். அவர் கருத்துக்கள் எனக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றியிருக்கலாம். அப்பொழுதெல்லாம்கூட முடிந்தவரை ஒத்துழைக்கத்தான் செய்தேன்; சிற்சில சமயம் நாசுக்காக, பெருந்தன்மையாக ஒதுங்கியுமிருந்தேன். அரசியல் துறவும் பூண்டுயிருந்தேன் சில காலம். இன்று காரணமின்றி தூற்றப்படுகிறேன், கவலையில்லை; நேற்று நம்மைப் புகழ்ந்தவர்தானே, அவர்! இன்றும் கூட என்மனக்கண் முன்னே ஒருகாட்சி, ஓடிவந்து நிற்கிறது.

ஈரோட்டிலே விடுதலைக் காரியாலயத்தில் நான் வேலை பார்த்துக்கொண்டிருந்த காலம் அது. அப்போது விடுதலையில் சென்னை கார்பொரேஷனைப் பற்றி ஒரு தலையங்கம் தீட்டினேன் "ரிப்பன் மண்டபத்து மகான்கள்" என்பதுதான் அதன் தலைப்பு, அன்றுமாலை நான் ஈரோட்டில், மூன்றடுக்கு மாளிகையில் கடைசி மாடியில் உலாவிக்கொண்டிருந்த நேரத்தில் பெரியார் மூன்று மாடிகளையும் கஷ்டத்துடன் படியேறி, கடந்து வந்து என் முதுகைத் தட்டி. "அண்ணாதுரை! உன் தலையங்கம் ரொம்ப நன்றாக

(10-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் உள்ளங்களில் அண்ணா!

அண்ணா முடிவு எய்திவிட்டார். அண்ணா வாழ்க. அவரின் கொள்கை வாழ்க!

நோய் வருவதும் இறப்பதும் மனித ஜீவனுக்கு இயற்கையாகும். இதில் யாரும் தப்பமுடியாது. அதற்காக மக்கள் வருந்துவதும் துக்கம் அனுஷ்டிப்பதும் மக்களுக்கு ஒரு சம்பிரதாயம்.

ஆனால் இந்தச் சம்பிரதாயத்தையெல்லாம் அறிஞர் அண்ணாவின் இழப்பு தாண்டி விட்டது. அண்ணா மக்களின் உச்ச நிலைத் துக்கக் கொண்டாட்டத்தைப்பெற்றுவிட்டார்.

நான் அறிந்தவரை அண்ணாவின் மறைவுக்கு பொதுமக்கள் காட்டிய துக்க கொண்டாட்டத்தில் எட்டில் ஒரு பங்கு அளவு கூட வேறுஎவருடைய முடிவுக்கும் காட்டியதாக நிகழ்ச்சி கிடையவே கிடையாது. அண்ணா தமிழ் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்று விட்டார்.

—பெரியார். ஈ. வெ. ரா

# காஞ்சி மகான்



காசிஆனந்தன்

(அண்ணா மறைந்து ஆறுவது நாளன்று கொழும்பில் நடைபெற்ற கவியரங்கம் ஒன்றில் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் பாடியது.)

அண்ணாவை வழியனுப்பி ஆறுநாள் ஆகிறது!
என்னருமை நண்பர்காள் இன்னும் நாம் அழுகின்றோம்!
மண்ணுலகில் இற்றைவரை இதுபோல மனம் அழுந்தி
இன்னொரு நாள் வரலாற்றில் இன்னொருவர்
அழுததில்லை!
காந்தியடிகளை இழந்து காணாத பெருந்துயரம்
காஞ்சியடிகளை இழந்து கண்டதனால் அழுகின்றோம்!
முப்பலெட்சம் பேர்கள் முழுதுலகும் பேர்பெற்ற
ஒப்பில்லான் கென்னடியின் ஊர்வலத்தும் போனதில்லை!
காந்தியடிகள் மறைந்த கணப்பொழுதில் துடிதுடித்து
மாந்தரிலோர் நாற்பதுபேர் மாண்டகதை
நாமறியோம்!
சேர்மாட்டின் லூதர்கிங் சிரஞ்சீவி அவனுடைய
சாவீட்டில் ஒருவாரம் சனம் திரண்டு நின்றதில்லை!
அண்ணாவை எண்ணுகிறோம்... அவன் பெருமை
எண்ணுகிறோம்!
சாகும்வரை தமிழினத்தின் தலைநிமிர வைத்ததுபோல்
சாவணைந்த பின்னுமிவன் தமிழர் தலை நிமிர்த்துகிறான்!
அண்ணா எனும் பெரியன் ஆமாம் இதுவரைக்கும்
மண்மீது வந்தவருள் மாபெரியன் தோழர்களே!
நேற்றுவரை பூவுலகில் நேஞ்சாரப் பாவலர்கள்
போற்றிநின்ற மன்னர்களே புகழ்பெற்றார்
என்றறிவோம்!
இன்றைய நாள் அண்ணாவைப் போற்றுகின்ற
பாவலர்க்கே

உண்டு புகழ் என்பதனால் அண்ணனொரு படியுயர்ந்தான்!
ஆமாம் என் தோழர்களே....அண்ணா மிகப்பெரியன்!
இத்தரையில்பெருமனிதர் எத்தனையோ பேரிருந்தார்...
பத்தாயிரம் ஆற்றல் ஒருவரிடம் இருந்ததில்லை!
அண்ணனிடம் இருந்ததனால் அவனொருவன் மகானானன்!
ஆயிரம் தலைவர்களும் ஆயிரம் புலவர்களும்
ஆயிரம் வீரர்களும் அண்ணனெனும் ஓர்வடிவம்!
இப்படியோர் வடிவம் இதிகாசத்திலும் இல்லை!
என்னண்ணன் தமிழ்நாட்டில் எழுந்துவந்த காலத்தை
இந்நாள் நான் எண்ணுகிறேன் இதயம் சிலிர்க்குதம்மா!
கல்லுக்குப் பால்பொழிவார்...காய்ந்தபடி தெருவினிலே
பிள்ளைக்குப் பாலின்றித் தாய்மாரோ துடிதுடிப்பார்!
சாமிக்குப் பட்டாடை சாத்தி மகிழ்ந்திருப்பார்...
வீதியிலே தமிழ்மங்கை வெளிவர ஓர் ஆடையின்றி
ஒட்டைக் குடிசையொன்றில் உட்புறத்தே
மறைந்திருப்பாள்!

சோம்பேறி ஆண்டிகட்கு மடங்கட்டிக் கொடுப்பவர்கள்
தாம்பெரிய புண்ணியவாளர்களெனத் தம்பட்டம்
அடித்திருந்த வேளையிலே அழகான தொழிலாளி
தரித்திருக்க வீடின்றித் தெருவினிலே குடியிருந்தான்!
பிச்சை கொடுப்போர் வந்தால் பேசாமல் போகிறவன்
அர்ச்சனைக்குக் கொண்டுபோய் ஆயிரம்
ரூபாக்கொடுத்தான்!
ஊணின்றி ஏழையர்கள் உயிர்துடித்து மாழ்கையிலே
மீனாட்சி மூக்குத்தியின் மகிமை மேடைதொறும்
பேசி மகிழ்ந்திருந்த பிறவிகளின் காலமது!
வாசலிலே குறுக்கிட்ட பூனையையும் மதித்தவர்கள்
வாழ்வெல்லாம் உழைத்தவனை மதிக்காத
கொடுங்காலம்!
பஞ்சாங்கம் பெற்றிருந்த பாராட்டு நாட்டினிலே!
கொஞ்சமும் நம்முடைய குறளுக்கிருக்கவில்லை!
முரசொலிக்க ஆண்டிருந்த தமிழினத்தார் முகம்வாடி
அரசமரத்தின் கீழே அனாதைகளாய் இருந்தார்கள்!
முல்லைக்குத் தேர்கொடுத்த முடியரசர் சந்ததியார்
சில்லறையும் இல்லாமல் தெருத்தெருவாய்ச்
செத்தார்கள்!
அந்நாளிலேதான் என் அண்ணன் அவதரித்தான்!
கோடையிடி முழக்கம்போல் என் அண்ணன் ஊர் ஊராய்
மேடைதொறும் தமிழினத்தின் மிடிமைநிலை
எடுத்துரைத்தான்!
நெருப்பினிலே தமிழ் செய்து நீசர்களின்
முன்போட்டான்!
தண்ணீரில் தமிழ்செய்து தவித்தவர்கள் முன்வைத்தான்!
அறிவில்லா மூடர்களை அறிவுடையார் அடிமைகளாய்
இறைவனுக்குப் பயமுறுத்தி இறைவனையும் பாழாக்கி
வாழ்ந்திருந்த நிலைமாற்றி வண்டமிழர் நாட்டினிலே
தாழ்ந்திருந்த மூடர்களின் தலைநிறையப்
பொருள்கொடுத்தான்!
மேற்சாதி கீழ்ச்சாதியை நசுக்கி மிரட்டியநாள்
போர்ச்சாதியில் பிறந்த என்னண்ணன் போர்தொடுத்து
கீழ்ச்சாதி கிளிச்சாதி கூட்டிலிருந்து கிளம்பி
மேற்சாதியாய் மாறும் விடுதலையும் பெற்றளித்தான்!
முதலாளி தொழிலாளியை வருத்தும் அடிமைநிலை
அதனையும் என் அண்ணாச்சி அடியோடு
மாற்றிவைத்தான்!
வியர்வைத் துளிகளுக்குப் பொங்கல் நாள்
விழாவெடுத்தான்!
துயர்தீர்த்தான்! உழைப்பாளர் தோள்களுக்குப்
பலங்கொடுத்தான்!
ஆண்டிருந்த தமிழினத்தின் அடிமைநிலை மாற்றுதற்கு
மாண்டொழிந்த பழந்தமிழர் கதைகளினைச் கண்ணீரால்
அண்ணன் எடுத்துரைக்க அதை மக்கள் கேட்டிருக்க
கண்கள் சிவந்துவர... தோள்களெல்லாம் கல்லாக...
அந்நாளிலே நிகழ்ந்த போராட்டம் அத்தனையும்
இந்நாள் நினைந்தாலும் இரத்தமெலாம் சூடேறும்!
ஆமாம்! என்தோழர்களே! நாலுவகை அடிமைகளை
பூமியிலே ஒருதலைவன் காத்தகதை புதியகதை!
என் அண்ணன் மட்டுந்தான் இப்பெரிய
போர்செய்தான்!
அன்னதொரு காரணத்தால் அவன்பெரியன்
ஆகிவிட்டான்
தோழர்களே! தோழர்களே! தமிழர்களின்
தோள்சுமக்கும்
பெருமைகொண்டு வந்தவனின் பெருமைகளைப் பேசுங்கள்
கண்ணீர்விட்டழுதாலும் அண்ணாவின் புகழுடம்பை
எண்ணி எண்ணி இடைமகிழ்வீர்— அதன்பின்னர்
புலம்புங்கள்!
அண்ணா எனும் நாமம் ஒருநாளும் அழியாது!
இடிவிழலாம புயல்வரலாம் பூகம்பம் ஏற்படலாம்!
கிடுகிடென இவ்வுலகம் கீழ்மேலாய் ஆகிடலாம்!
காஞ்சியிலே பல்லவர்கள் கட்டிவைத்த கோயில்களும்
சாய்ந்து விழலாம்... அண்ணா அப்போதும்
வாழ்ந்திருப்பான்!

## கவிஞர்காசி ஆனந்தன் படைக்கும் அண்ணாகாவியம் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகிறது!

## திருமலையில் தனிச் சிங்களமா?

திருகோணமலை இ: போ. ச. டிப்போவைச் சேர்ந்த பஸ்களில் தனிச் சிங்களம்!

திருமலை இ: போ. ச: வைச் சேர்ந்த சகல பஸ்களிலும், அவை எந்த டிப்போவைச் சேர்ந்தவையென்பதைக் குறிக்கும் சொற்கள் 'திம' என்று தனிச்சிங்களத்தில் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளது. இதனால் குறிப்பிட்ட பஸ்கள் எந்த டிப்போவைச் சேர்ந்தவையென்பதையறியமுடியாது தமிழ் பேசும் இ.போ.ச. ஊழியர்களும் பொதுமக்களும் அல்லல்படுகின்றனர்

தமிழ்ப்பகுதியில் நடைபெறும் இத்தனிச்சிங்களத் திணிப்பை தடுத்து நிறுத்துவதற்கு திருமலை எம். பி. தக்க நடவடிக்கையெடுப்பாரா என்று பொதுமக்கள் கேட்கின்றனர். இதை எதிர்த்து திருமலை இளைஞர் அருள்ஜோதி மன்றமும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

—

## எங்கே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தப் பணத்தை வைத்துக் கொள். எங்களுக்கு நேரமாகிறது நாங்கள் போய் வருகிறோம்' என்று கூறி அவன் கையில் ஒரு இரண்டு ரூபா நோட்டைத் திணித்துவிட்டு அந்தப் பெரியவரும் கூட்டமும் அவ்விடத்தை விட்டு நழுவினர்.

அவர்கள் செல்வதையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த ரகு மெதுவாக எழுந்து தனது வேட்டியில் படிந்திருந்த மணலைத் தட்டி விட்டு சுற்றுப்புறந் திரும்பி ஒரு நோட்டம் விட்டான். அவன் எதிரே பரந்த கடல் அலைமோதிக் கொண்டிருந்தது. அந்த கடலை ஒட்டினாற் போல் சென்ற தார்ப் பாதையின் மறுபக்கத்தில் பல கட்டடங்கள் தென்பட்டன. கடல் இருந்த சூழ்நிலையில் அந்த இடம் அவனுக்கு வல்வையை நினைவூட்டியபோதும் எதிர்ப்புறமிருந்த கட்டடங்கள் அது வேறோர் ஊர் என்பதை அவனுக்குத் தெளிவு படுத்தியது.

அந்தப் பாதை வழியே சிலர் போவதும் வருவதுமாக இருந்தனர். ஆனால் அவர்களில் ஒருவர் கூட அவனுக்கு அறிமுகமானவர்களாகத் தெரியவில்லை. அவர்களிடம் ஏதாவது கேட்டறியலாம் என்றால் அவர்களுக்குத் தான் அந்த ஊருக்குப் புதியவன் என்பது தெரியக் கூடாது என்பது அவன் விருப்பம்: ஆகவே அவன் மெதுவாக நடந்தான். இரண்டு மூன்றடி நடந்தபின் எதிர்புறத்தில் தெரிந்த ஒரு பச்சைக் கட்டடம் அவன் கவனத்தை ஈர்த்தது. அவன் சற்று அண்மையில சென்று அந்தக் கட்டடத்தின்முன்னால் பொருத்தப் பட்டிருந்த பெயர்ப் பலகையைப் படித்தான்- 'எலிபென்ற் ஹவுஸ்' திருகோணமலை என்றிருந்த அந்த எழுத்துக்கள் அவனுக்குப் புத்துயிர் அளித்தன.

## தினபதி என்னும்......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்து வாக்களிப்பதுடன் மட்டுமன்றி அண்ணாவைப் பற்றி இழித்துரைக்கவும் தொடங்கியிருப்பர். இது குளிக்கப் போய் சேறு பூசுவது போல—அண்ணாவுககு அனுதாபம் தெரிவிக்கப் போய்—அவருக்கு அவமதிப்பு தந்ததாக ஆகிவிடும். ஆறுகோடித் தமிழர்களின் ஈடிணையற்ற தலைவனுக்கு அவமதிப்பு ஏற்படும நிலை தோன்ற சிறிதும் இடமளிக்க மாட்டோம்.

(3) பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட 6ந் திகதியன்று ஒத்திவைப்பு பிரேரணை மீது அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தி உரையாற்றுவதற்கு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தயாராக இருந்தார். ஆனால் ஆக அரை மணித்தியாலம் மட்டுமே நடைபெற்ற ஒத்திவைப்பு விவாதநேரத்தில் ஏறத்தாழ 25 நிமிடங்களை திரு. பொன்னம்பலம் தமது பேச்சுக்காக எடுத்துக் கொண்டு விட்டார். இதன் பின் சபை உடனடியாக ஒத்திவைக்கப்படவே திரு. வி. தர்மலிங்கத்தாலும் பேச முடியாது போயிற்று.

(4) அண்ணாவுக்கு அனுதாபத் தீர்மானம் கொண்டு வரவில்லையென தமிழரசு எம். பீக்கள் மீது மட்டும் கல்லெறிந்து பொய் கூறும் தினபதி தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள், திரு. தொண்டமான் போன்றவர்களிடம் ஏன் இது பற்றி கேட்கவில்லை? மூச்சுகூட விடவில்லை? அவர்கள் தமிழர்கள் இல்லையா? அவர்களும் தானே அண்ணா அனுதாபக் கூட்டங்களில் பங்கு பற்றுகிறார்கள்?

## இமிடேட்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டில், அவர் நகரசபைத் தேர்தலில் பெத்துநாய்க்கன் பேட்டைத் தொகுதிக்கு நின்றபோது தான். காங்கிரஸ், சட்டசபைகளை மட்டுமல்லாமல் ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்ற வேண்டுமென்று தீவிரமாகத் தேர்தலில் ஈடுபட்ட காலம் அது.

அண்ணா அத்தேர்தலில் தோற்றுப் போனார். அதுவும் ஒருவிதத்தில் நல்லதாயிற்று. அவ்விதம் நேராவிலையானால், அவர் நகரசபை வேலைக்கிடையே தான் உழன்று கொண்டிருப்பார். அவருடைய நுண்ணறிவும் பேராற்றலும் வியர்த்தமாயிருக்கும்.

## உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

சுதந்திரனில் வாராவாரம் வெளிவரும் கட்டுரைகள், கதைகள் ஏனைய விடயங்கள் பற்றி வாசகர்களாகிய உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

களுத்துறையில்
சுதந்திரன் கிடைக்கும்
வேதநாயகிஸ்டோர்ஸ்
604, மெயின் வீதி
களுத்துறை தெற்கு

# தன்னாட்சி இல்லாததால் தானே....!

தன்னாட்சி இல்லாததால் தானே ஈழத்திலே நம்மவர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப் படுவது குறித்து, கண்ணீர் வடிக்கவும் கைபிசைந்து கொள்ளவும் மட்டுமே, நம்மால் முடிகிறது. அமைசசர்கள் என்போர்ஒருஅறிக்கைமூலம் கூடக் கண்டனம் தெரிவிக்க வழிஇல்லை. 'நமக்குத் துளியும் சம்பந்தமற்றவர்களின் பிடியாகஇந்தியப் பேரரசுஇருப்பதால்தானே, ஈழத்திலே கொடுமை புரியும் திருமதி. பண்டார நாயகாவைக் கண்டிக்க வேண்டிய பண்டிதநேரு, மாம்பழம் அனுப்பிவைக்கிறார் அம்மையார் தின்று சுவைகண்டு மகிழ! இவர் மாம்பழம் அனுப்புகிறார்; அம்மையார் மங்குஸ்தான்பழம் அனுப்புகிறார்கள்!

'சிங்களம் சென்று செக்கு மாடென உழைக்கும் நம்மவர்களோ, வெறியரால் தாக்கப் படுகிறார்கள், அவர்களின் குடிலிலே நேருவின் திருஉருவப் படம் வேறு இருக்கிறது.

'இன்று எந்தச் சிங்களத்திலே இந்தக் கொடுமை இழைக்கப்படுகிறதோ, அங்கு கரிகாற் பெருவளத்தான் வெற்றிகண்டு, பிடிபட்ட சிங்களக் கைதிகளைக் கொண்டுவந்தல்லவா காவிரிக்குக் கரைஅமைத்தான் என்று வரலாறு தெரிவிக்கிறது. கல்லணை அமைத்தஇனம்இன்று, கங்காணியின் சவுக்கடியைப் பெற்றுத் துடிக்கிறது.''

—அமரர் அண்ணா

## அறிஞர் அண்ணாவின்

[8-ம்பக்கத் தொடர்ச்சி]

இருந்தது, எவக்கு மிகவும் சந்தோஷம்'' என்று வெகுவாகப் பாராட்டினார் இதைக்கேட்டநான், 'இதற்காக ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு மாடிஏறிவரவேண்டும்? சாப்பிட கீழே வரும்போது, சிரமமின்றிக் கூறியிருக்கலாமே இதனை' என்று தெரிவித்தேன்.

அதற்குப் பெரியார், 'என் மனதில் நல்லதென்று தோன்றியது. அதை உடனே கூறிவிட வேண்டுமென்று நினைத்தேன். ஏனென்றால் நான் 'பிறரைப் புகழ்ந்து பேசிப் பழக்கப்பட்டவனல்ல. ஆகவே உடனே சொல்லிவிட வேண்டுமென்று, வந்து சொல்லிவிட்டேன்!' என்று சொன்னார். இந்த ஒரு சம்பவம் போதுமே எனக்கு ஆயுள் பூராவும் அவரிடம் திட்டு வாங்கினாலும் பரவாயில்லையே, புகழ்ந்த பிறகுதானே திட்டுகிறார், முதலிலிருந்தே கடைசிவரை திட்டுவாங்கிக் கொண்டு, இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்களே, அதைவிட நான் மேல் லாப நஷ்டக் கணக்குப் பார்த்தேன். அவர் புகழ்ந்தது அதிகம் இகழ்ந்தது கொஞ்சம், எனவேதான் அவர் திட்டுவதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

நான் அவரிடம் வெளிப்படையாகக் கொஞ்சம் அதிருப்தி தெரிவித்தது கோவை மாநாட்டில்தான், நான் கேட்டேன், திருவண்ணாமலையில் ஆச்சாரியாரைச் சந்தித்துப் பேசிய இரகசியம் என்ன? கூறுங்கள் வெளிப்படையாக, என்று கேட்டேன். இதைக்கூட நான் கேட்க, முதலில் விரும்பவில்லை. ஆனால்நாட்டு நிகழ்ச்சிகள் என்னைக் கேட்கும்படி வைத்துவிட்டன. என்னைக்கண்ட பலர், 'என்னப்பா முன்பு வந்தபோது கருப்புக்கொடி பிடித்தீர். கண்டனம் தெரிவித்தீர், ஜெயிலுக்குப் போனீர்கள். இப்பொழுது என்ன உங்கள் தலைவர் இரகசியமாகச் சந்திக்கிறார் திருவண்ணாமலையில், என்று கேலிசெய்தனர்- நகைப்புக்கு இடமாக இருந்தது நிலைமை. இந்த நிலைமை தெளிவுபட, அதற்குப்பின் நான் அவரைச் சந்தித்தது அந்த மாநாட்டில்தான். திருவண்ணாமலையில் என்ன இரகசியம் பேசினீர்கள் என்று கேட்டேன். அதோடு நிற்கவில்லை. நடந்ததைச் சொல்லுகிறது. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கெடுதி என்று தோன்றினால் சொல்லத் தேவையில்லை. சொல்ல வேண்டாம் என்றும் அன்று அங்கு தெரிவித்திருக்கிறேன் சொல்லும்படி வற்புறுத்தவில்லை என்றும் கூறினேன்.

பெரியார் கூறியிருக்கிறார் திருச்சியில், நான் இன்னும் 10 ஆண்டுகளாவது வாழ விருமபுகிறேன் அதற்காகத்தான் திருமணம் என்ற பேரில் ஒரு ஏற்பாடு, எனது வாழ்க்கைத் துணை ஏற்படுத்திக் கொண்டேன்' என்று பேசினார்.

அவர் நன்றாகவாழட்டும்! பத்து ஆண்டுகளல்ல. இருபது ஆண்டுகள் வாழட்டும். சீனக் கிழவரைப்போல, பர்மிய நாட்டு வயோதிகரைப் போல, துருக்கி நாட்டு பெரியோரைப் போல வாழட்டும்! இன்னும் காந்தியார் (வாழ விரும்பியபடி 125 ஆண்டு)- வயதுவரையில் வாழட்டும்! திராவிட முன்னேன்றக்கழகப் பெரும் பணியைக் கண்களால் காணட்டும்! ''அவர் கொள்கை திட்டம், நம்மால் நிறைவேற்றப்படுவதைக் கண்டு களிக்கட்டும்!'' தவறு என்றால் தான் திருத்தட்டும்! போகும் பாதை தவறு என்றால் சுட்டிக்காட்டட்டும்! ஆனால் வேலை செய்வதைத் திடுக்கவேண்டாம்: பகையுணர்ச்சியைவளர்க்கவேண்டாம், திராவிட கழகத்திற்கும், திராவிடமுன்னேற்றக் கழகத்திற்குமிடையே! நீங்கள் எப்படி வேலைசெய்கிறீர்கள் என்று ஒரு அறைகூவல் விடுத்து விட்டு, அவர் தம்வழி நடந்து கொண்டு போகட்டும்.

திராவிடர் கழகமாகட்டும். திராவிட முன்னேற்றக் கழமாகட்டும், படைவரிசை வேறு என்றாலும் கொள்கை ஒன்றுதான், திட்டமும் வேறு வேறு அல்ல, என்ற நிலை இருந்தே திரும். படை வரிசை இரண்டு பட்டு விட்டது என்று எக்காளமிடும் வைதீகபுரிக்கும், வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து வைதிகக் காட்டை அழித்து சமதர்மப் பூங்காவைத் திராவிடத்தைச் செழிக்கச் செய்தல் வேண்டும். அதிலே எந்த கழகம் பூங்கா அமைத்தாலும் அதில பூக்கும் புஷ்பங்கள், காய்கள், கனிகள் திராவிடத்தின் எழுச்சியை, மலர்ச்சியை, மகிழ்ச்சியைத் தான் குறிக்கும். இரு பூங்காவும் தேவை, ஒன்றோடொன்று பகைக்கத் தேவையில்லை- அவசியமும் இல்லை. எது புஷ்பித்தாலும் மாலையாகப் போவது திராவிடத்துக்குத்தான் என்ற நல்ல எண்ணம் வேண்டும். அதை விட்டு நள்ளிரவிலே பூங்காவின் வேலி தாண்டி பாத்தியை அழிக்கும் வேலி தாண்டிகள் வரக் கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ஒட்டுமாஞ்செடிதான். மண்வளம் ஏராளம். அதே பூமி, நீர்ப்பாச்ச, பதப்படுத்த, பாத்தி கட்ட முன்னிற்போர் பலர். ஒட்டு மாஞ்செடி பூத்துக் காய்த்து கனி குலுங்கும் நாள் வந்தே திரும்! இதனால் ஒட்டு மாஞ்செடி மாமரத்துக்கு விரோதமல்ல. திராவிடக் கழகத்துக்கு முரணானது அல்ல. ஒத்த கருத்துக் கொண்டதே ஒட்டு மாஞ்செடி!

## விவேகானந்தரும் மகாத்மாவும்

தொடர் கட்டுரை அடுத்த வாரம இடம் பெறும்!

## வேலூர் சிறையில்.....

(11-ம் பக்கத் தொடர்)

அண்ணா ஆறுதல் சொன்னார். அந்த உள்ளமுருக்கும் நிகழ்ச்சியைப் படியுங்கள்.

பகல் பதினொரு மணி இருக்கும் வேலூர் சிறையில் இரண்டுமாத தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்ததோழர் ப. உ. சண்முகம், போளூர் சுப்பிரமணியம் ஆகியோர், மற்ற நண்பர்களுடன் அண்ணாவின் வழக்கு முடிவு என்ன வாகும் என்ற ஆலோசனையில் மூழ்கிக் கிடந்தனர். திடீரென்று ''அண்ணா வாழ்க'' என்ற ஒலி அவர்களைத் திடுக்கிட வைத்தது.

அவர்கள் பார்வை தூரத்தில் பதிந்தது.

எல்லாரும் அவர்களையும் மறந்து, சிறுவர்கள்போல் துள்ளி எழுந்து, 'அண்ணா வாழ்க!' —என்று கூறியவாறே ஓடினார்கள்.

நமது உணர்ச்சிமிகு தோழர்களின் மத்தியில் 'கொன்றைப்பூ மாலை சூழ' தென்னகக் கோமான் வந்து கொண்டிருந்தார். ஓடிச் சென்று கட்டித் தழுவிக் கொண்டார்கள், அண்ணனை!

சிறைக்குள்ளேயே உள்ள ஒரு தனி இடம் மேடையோடு கூடிய ஒரு கூடம்! அண்ணாவும் மற்ற நண்பர்கள் அனைவரும் உற்சாகத்தோடு கூடினர்.

''நண்பர்களே! நமது அண்ணனை தண்டித்து விட்டார்கள்'' என்று ப. உ. சண்முகம் மிகவும் வருத்தத்தோடு சொன்னார்.

ஆனால் அண்ணா அவர்கள், 'நண்பர்களே! நான் தண்டிக்கப்பட்டதற்காக வருந்தாதீர்கள்; என்னைத்தண்டித்த ஆட்சியை திருச்செங்கோடு மக்கள் தண்டித்துவிட்டார்கள். என்னைச் ஆட்சியாளர்சிறைக்குள் அனுப்பினார்கள்- திருச்செங்கோட்டு மக்கள் சுந்தப்பனை பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்கள்: இந்தப் பெருமையோடு நமது கழகம் இன்று புது அந்தஸ்தைப் பெற்றுள்ளது நான் அந்தப் பூரிப்பில் இருக்கின்றேன்'' என்றார்.

ஃ ஃ ஃ

## இரண்டே நிமிடங்கள்...

ஒரு நாள், வேலூர் சிறையில் அண்ணாவை சந்திக்க இயக்கத் தலைவர்கள் பலர் வந்திருந்தனர். அன்று அண்ணி அவர்களும் வந்திருந்திருக்கிறார்கள்:

அண்ணா அவர்கள் இயக்கத்தவர்களிடம் வெளியே நடப்பவை பற்றிப் பேசி, அவர்களுக்கு வழிமுறைகள் சொல்லவே நீண்ட நேரமாகி விட்டது. ஆகவே அண்ணியாருடன் அவர் இரண்டே இரண்டு நிமிடங்கள்தான் பேச முடிந்தது.

அதுகுறித்து அவர், 'நம்மைக் கட்டிக் கொண்ட புண்ணியவதி அவ்வளவு கொடுத்து வைத்தவள்!' —என்று உணர்ச்சியுடன் சொன்னார்.

ஃ ஃ ஃ

## அண்ணா பாடிய பாட்டு

வேலூர் சிறையில் சமையல் அறையில் அண்ணாவுக்கு உதவியாக இருந்த குடியாத்தம் நண்பர் கண்ணாயிரத்தையும், திருவண்ணாமலை கோவிந்தசாமியையும் பாராட்டி அண்ணா இரண்டு வாழ்த்துப் பாக்கள் எழுதினார்:

ஒன்று.

கண்ணாயிரத்தின் கைவண்ணம் கண்டார்
பண்ணாயிரம் பாடுவார் மகிழ்ந்து
கல்லொடு மண்ணும் கலந்து உறவாடும் அரிசி
காயா?பழமா?எனும் கேள்விக்குறியில் கறிகள்
இவைதமை சிறையினர் அளித்திடக் கண்டு
சுவைமிகு உண்டியாய் அவற்றினை மாற்றி
சிறையுள குறைகளை மாய்த்திட முனைந்து
நெருப்பெதிர் நின்று நேர்த்தியாய் வென்று
பலப்பல சமைத்துப் பரிவுடன் அளித்தார்
பண்பெனும் பாகு மிகுதியும் பெய்து
கண்ணாயிரம் என்ற ஒலி கேட்டபடி இருக்கும்
கண்ணாயிரம் வந்து தந்தபடி நிற்பார்
புன்னகையொன்று பூத்தபடி இருக்கும்
புதுச்சுவை கலந்திருக்கும் ஒவ்வொன்றிலும்
கடுகு அதிகமாகி கருநிறமாய்ப் பண்டம்
காட்சிகொளும்
ஆங்கு செக்கச்சிவந்த மேனி அழகுடனே
மிளகாய் தோன்றும்
கலராயிரம் ஆலார் கண்ணாயிரம் அன்று!
கலகலப்புமிக்க ஒலி எழுப்பி அதுபோல்
அழைத்திடுவார் சண்முகம் அன்பால்!
அண்ணா இதோ வந்தேன் என்றுகூறி
என்னே இவர் எமக்குக் காட்டும் பரிவு
என்றும் மறக்கொணாத பணிவு கனிவு!
வாழிய கண்ணாயிரம் நற்றொண்டர்
வளர்ந்துவரும் கழகத்தின் வாழ்த்துப்பெற்று.

★

அடுத்த வாழ்த்துப்பா,
மாநிலம் உயர்ந்திட மாமழை
தானளிக்கும் வானத்து வள்ளலும்
வந்தேன்! தந்தேன்! என்று ஆர்ப்பரிக்கும்;
மாண்புமிகு தொண்டர்கள் முறை அஃதன்று
மகிழ்வோடு பணிபுரிவர் அமைதிகாத்து.
ஆலும் அரசும் வேம்பும் உண்டு
அழகு மலர்தரும் தருக்களும் கண்டோம்
அருவிக்கரையெனின் அணிகளே அவைதாம்
யாம் அடைபடும் அறைகளின் எதிரேயன்றோ
உள
ஆங்கு எமக்கு 'இமையாக்'த் தமையாக்கிக்
கொண்டு
முதுமை மறந்து இளமை மேற்கொண்டு
இனிய இயல்பினால் எமை மகிழ்வித்தார்
கோவிந்தசாமி எனும் கொள்கைத்
தொண்டர்!
கேட்போர்மகிழ இசை வழங்கும் வானம்பாடி
நம்மிடம் கேட்பது ஏதேனும் உண்டா? இல்லை!
கெழுதகை கோவிந்தசாமியின் முறையும்
அஃதே
ஓயாது உழைப்பார் எம் உருக்குலையாதிருக்க
திருவண்ணாமலை வாழ் வார்! நித்திப்புக்குக்
குறைவு ஏது?
திருவிளக்காய்த் திகழ்ந்தார் சிறைஇருள்
அகற்றி:
நெடிது காலம் வாழ்க, தொண்டர் கழகம்
வாழ!

ஃ ஃ ஃ

அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்விலே நிகழ்ந்த சுவையான சம்பவங்கள் — மாதிரி பார்த்துக்கொண்டு நாமும் பின்பற்றி முன்னேறிடத் தக்க பயனுள்ள நிகழ்ச்சிகள் இவை மட்டுமல்ல.

விண்மீன்களின் எண்ணிக்கையைவிட, வைகையாற்று நுண் மணலின் கணக்கை விட அவை மிகப் பலவாகும்.

தனது வாழ்க்கையிலே அண்ணா அவர்கள் சந்தித்த நிகழ்ச்சிகள் அத்தனையையும் தொகுத்துத் தந்திடும் நோக்கத்துடனேயே இந்தக் கட்டுரையினை எழுதத் தொடங்கினோம். முடிந்த வரையிலே அந்த மேதையின் வாழ்க்கைக் குறிப்பினைத் தொகுத்துத் தந்திருக்கிறோம், மற்ற பலரும் பயன்பெற்றிட வேண்டும் என்கிற நோக்கத்துடனே!

அவர் வந்த வழியினை நாமும் நம்வழியாக மாற்றிக் கொண்டுவிட்டோமானால்... அல்லது அண்ணா அவர்களையே பின் பற்றி நடக்கத் தொடங்கினோமானால், நாமும் கூட நாலுபேருக்கு அறிமுகமானவர்களாகி விடுவோம்; நல்ல இதயங்களின் அன்புக்குப் பாத்திரமானவர்களாகி விடுவோம் என்பது திண்ணம்.

அறிஞர் அண்ணா அவர்களின் அசைவு ஒவ்வொன்றும் நம் முன்னேற்றத்தின் வழி காட்டுவதாக அமைகின்றது.

அறிஞர் அண்ணா அவர்களின் சொல் ஒவ்வொன்றும் நம் இதயத்தில் இதமேற்றுவதாக இருக்கின்றது.

அறிஞர் அண்ணா அவர்களின் செயல் ஒவ்வொன்றும் நமது வாழ்வினைச் சீர்படுத்துவதாகவே விளங்குகின்றது.

# வேலூர் சிறைச்சாலையில் அண்ணா எழுதிய பாட்டு!

அண்ணா வாழ்விலே......
(சென்ற இதழ் தொடர்ச்சி)

## மேடைப் புரட்சி

அண்ணா கம்பரின் காவியமாம் கம்பராமாயணத்தை அலசி, அதிலுள்ள ஆபாசங்களை அம்பலப்படுத்தினார். "கம்பரின் காவியம் தலைப் பொக்கிஷமல்ல; காவியக் கோப்பையிலே ஊற்றிக் கொடுக்கப்பட்ட காமரசம்" என்று எடுத்துக் காட்டி விளக்கினார்.

பக்தர்கள் அண்ணாவின் போக்கைக் கண்டிக்க சீறி எழுந்தனர். பல பேராசிரியர்களும், எதிர்ப்பு முன்னணி அமைத்தனர். அவர்களின் எதிர்ப்பைக் கண்டு அண்ணா தயங்கிவிடவில்லை.

அண்ணாவின் கருத்துக்களை ஏற்க மறுத்தவர்களில் முக்கியமானவர்கள் பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழ்ச் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை—ஆகியோர்.

அதன் பலனாக, சென்னை சட்டக் கல்லூரி மண்டபத்தில் 9-2-43ம் நாள் ஒரு சொற்போருக்கு ஏற்பாடாயிற்று. திரு. இராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் கூடிய அந்தக் கூடத்தில் இராமாயணத்தை எரிக்கக் கூடாதென்ற ரா. பி. சேதுப்பிள்ளை கம்பனின் இலக்கிய நயத்தையும், காவியச் சிறப்பையும் வெகு திறமையாகப் பேசினார்.

அண்ணா பேசும்போது, "கடவுளின் தன்மை பற்றி கூறப் புகுந்த நூலில் காம வெறியைத் தூண்டும் கற்பனைகள் இடம் பெறலாமா?" என்று கேட்டார்.

கம்பர் எழுதியுள்ள ஆபாசங்கள் எல்லாம் கவிநயத்தில் மறைக்கப்பட்டிருக்கிறது என்று கூறி, அந்தப் பாடலுக்கு, பதவுரை, விரிவுரை பொருளுரை ஆகியவைகளை எல்லாம் தந்தார். கூடியிருந்தவர்கள் வியப்புற்றனர். ஆதரவு வளர்ந்தது. தலைமை தாங்கிய பி. ராமச்சந்திரன் செட்டியார், தன் முடிவை அடுத்து அமைக்கப்படுகின்ற கூட்டத்தில் அறிவிப்பதாகக் கூறினார்.

அண்ணா அவர்கள் அன்று தொடுத்த அந்த சொற்போர்தான், "தீ பரவட்டும்" என்னும் நூலாக வெளிவந்தது.

ஃ ஃ ஃ

பின்னர் 1943-ம் ஆண்டு மார்ச் திங்கள், 14-ம் நாள், சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கப் பாடசாலை மன்றத்தில் "இராமாயணம் பெரிய புராணம்" எரிப்பு விவாதம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு, சேலம் கல்லூரித் தலைமையாசிரியர் திரு, ஏ. ராமசாமி தலைமை வகித்தார். அறிஞர் அண்ணா இராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்க வேண்டும் என்றும், கூடாதென்று நாவலர் சோமசுந்தர பாரதியாரும் பேசினார்கள்.

சோமசுந்தர பாரதியார் 'இராமாயணம் எரிக்கப்படக்கூடாது' என்பதுபற்றி பேசிவிட்டு, "நான் அவசரமாக மெயிலுக்குப் போக வேண்டும்" என்று கூறிவிட்டு வெளி வந்து விட்டார். மேடைமீது இருந்தால் தனது தோல்வி அம்பலமாகிவிடும் என்று எண்ணினாரோ என்னவோ? வெளியேறியவர் எங்கும் போய்விடாமல், ஓரிடத்தில்நின்று, அண்ணாவின் சொற்பொழிவு முழுவதையும் கேட்டுவிட்டுத் தான் சென்றார். அன்றிலிருந்து திரு. பாரதியார் அவர்களின் மனம் நல்லதோர் மாற்றத்தைக் கண்டது.

ஃ ஃ ஃ

## நீதிக்கட்சியிலே நீதியைக் காத்தவர்

தனி நபர் சத்தியாக்கிரக இயக்கம் 1941ல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொது கவர்னர் நீதிக்கட்சியாளரைப் பதவி ஏற்க வருமாறு அழைப்பு விடுத்தார்.

நீதிக்கட்சி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அண்ணா 'நீதிக் கட்சிக்காரர்களாகிய நாம். கவர்னர் அழைப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

அண்ணாவால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை, காலஞ்சென்ற சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களும், சர். ஏ. முத்தையா செட்டியார் அவர்களும் எதிர்த்தார்கள். இறுதியில் பெரியாரே, (நீதிக்கட்சியின் தலைவர்) தீர்மானத்தை வழிமொழிந்தார். அதன் பிறகு தீர்மானம் நிறைவேறியது.

சேலத்தில் 1944ம் ஆண்டு பெரியார் தலைமையில் நடந்த மாநாட்டில்தான் நீதிக்கட்சி என்ற பெயரை 'திராவிட கழகம்' என்று மாற்ற வேண்டும் என்று அண்ணா தீர்மானம் கொண்டுவந்தார். அதற்கு ஆதரவு அதிக அளவில் இருந்த காரணத்தால், நீதிக்கட்சி, திராவிட கழகமாக மாறியது.

திராவிட கழகத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்குப் பட்டம் பதவி நோக்கம் இருக்கக் கூடாது. ஆகவே பட்டங்களை விட்டு விட வேண்டும் என்ற அண்ணாவின் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

நாட்டுக்குத் துரோகமான பாதையில் தான் ஈடுபாடு கொண்டுள்ள கட்சி செல்ல இருந்த நேரத்தில் அதை நேர்வழிக்கு இழுத்துக் கொண்டுவர அண்ணா முயன்றார். அதில் வெற்றியும் பெற்றார்.

## மேடையில் நிகழ்ந்த சாதுர்யம்

இளமையிலிருந்தே நாடகக் கலையில் ஆர்வங் கொண்டிருந்த அண்ணா அவர்கள், தானே எழுதி, நடித்த நாடகங்கள் மேடைக்கலையிலே புதிய திருப்பத்தையே உண்டாக்கி விட்டது.

எவராலும் மடக்கப்பட முடியாத மகத்தான மதி நுட்பம் படைத்தவர்தான்.

ஆனால், அவரையே தன் நாவன்மையால் தோற்கடித்த பெருமை அண்ணாவைத்தான் சாருகிறது.

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. விஞ்ஞான மேதை திரு. ஜி. டி. நாயுடு தன் ஆராய்ச்சியின் பயனால் கண்டுபிடித்த பல விஞ்ஞானக் கருவிகளை நாட்டில் விநியோகம் செய்யவும், மக்கள் அவைகளைப் பெற்று, நல்வசதியையும் நல்வாழ்வையும் அடையவும் அரசாங்கம் அனுமதி தர மறுத்தால், அவைகளை உடைத்துத் தூள் தூளாக்க வேண்டுமென முடிவு செய்து, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்து அந்த மாபெரும் கூட்டத்தைக் கூட்டியிருந்தார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த பெரியாரும் மற்றும் பலரும் கண்டுபிடிப்புகளை உடைத்தெறியக் கூடாது என்றே பேசினர்.

ஆனால், அண்ணா மட்டும், 'தமிழ் விஞ்ஞானி ஒருவரின் கண்டுபிடிப்பு உலக மக்களுக்குப் பயன்படாமல் வீணாகிக் கொண்டிருக்கும் போது, உடைத்தெறியத்தான் வேண்டும்' என்றார்.

## விடுதலை இயக்கத்திற்கு.........!

தம்பி! விடுதலை இயக்கத்திற்குத் தேவைப்படுபவன்—எட்டு இலட்சம் கொட்டிக் கொடுக்கத்தக்க செல்வவான் அல்ல!— எதிர்ப்புக்கு அஞ்சாத ஏறுகள் வேண்டும்! வேளைக்கு ஒரு வேடமிடும், அரசியல் கழைக்கூத்தாடிகள் அல்ல. எந்தச் செயலையும், இலட்சியத்துக்கு வலிவு தரத் தக்கதாக அமைத்துக் கொள்ளத்தக்கவர்கள் வேண்டும். அவர்கள் குடிசை வாழ்வோராக இருக்கலாம், ஆனால் கொள்கைத் தங்கம் கொண்டோராக இருத்தல் வேண்டும். தேர்தலில்ஈடுபடலாம், ஆனால் வெற்றிக்காக ஏக்கம் கொண்டு, கூடாநட்பும், கொள்கை இழப்பும் தேடிக் கொள்ளக்கூடாது.

—அண்ணா.

'சந்திரமோகன்' நாடகம் நடந்துகொண்டிருந்தபோது, மேடையில் ஒரு சுவையானசம்பவம் நடந்தது.

வழக்கம்போல அண்ணா காகபட்டராக வேடம் பூண்டிருந்தார். காட்சியில் காகப்பட்டர், தம் சீடன் ரங்குவுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

"ஏன்டா மண்டு! கிருஷ்ண பரமாத்மாவுக்கு யார் யார் பதிவிரதைகள்னு நோக்கு தெரியுமோடா?' என்று கேட்டார்.

'பாமா... சுமத்திரை'... என்று சீடன் தவறாக அடுக்கிக் கொண்டே போனான்.

சீடனின் தவறான பேச்சைக் கேட்டுஇடைமறித்தார் அண்ணா. 'டேய்......டேய்... நிறுத்துடா... அவாளெல்லாம் அவருக்கு எக்ஸ்ராக்களடா' என்று ஆங்கிலச் சொல்லையும் பயன் படுத்தினார். நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நகைப்புடன் ஆரவாரம் செய்தனர்.

அந்தத் தவறைச் சமாளிக்க அண்ணா ஒரு தந்திரத்தையும் கையாண்டார். தன் தவறான பேச்சின் மூலம் புதியதொரு விளக்கத்தையும் பொது மக்களுக்குக் கொடுத்தார். 'என்டா மண்டு! என்னடா குரு புதிதா ஆங்கிலம்பேசுறேன்னு ஆச்சரியமா இருக்கா நோக்கு? நம் நாட்டுக்கு இப்போ புதிதா பரங்கியாள் வந்திருக்காளோ இல்லையோ அவாகிட்டேயிருந்துதான் கொஞ்சங் கொஞ்சமா கத்துண்டு வர்றேன்' என்றார்.

மாவீரன் சிவாஜியின் காலத்திலேயே ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்குள் நுழைந்து விட்டார்கள் என்று வரலாற்று உண்மையை பயன்படுத்தி, அறியாது விழுந்த ஆங்கில வார்த்தைக்குச் சமாதானம் கூறிய திறனை வியந்து நாடகம் பார்த்தோர் அனைவரும் புகழ்ந்தனர். ஃ ஃ ஃ

## தந்தையை வென்ற தனயன்

அன்றைய பெரியார் அஞ்சா நெஞ்சர்; அவனியையே கிடுகிடுக்க வைத்த மறவர்;

மக்கள் மன்றமும், அண்ணாவின் பேச்சுக்கு ஆதரவுதந்தது. மறுகணமே நாயுடு, தான் கண்டு பிடித்த கருவிகளை, சம்மட்டிகொண்டு தாக்கி உடைத்தார்.

ஃ ஃ ஃ

அண்ணாவின் எழுத்தில் மட்டுமல்ல; மேடைப் பேச்சில் மட்டுமல்ல; சாதாரண உரையாடல்களிலும் கூட நகைச்சுவை பளிச்சிடும்.

ஒரு சமயம் அண்ணாவின் நண்பர் இராசகோபால், தன்னை எலி கடித்துவிட்டதாகக் கூறினார்.

அதைக் கேட்ட அண்ணா புன்னகைத்துக் கொண்டே, 'அப்படியென்றால் ஊசி போட வேண்டுமே! போட்டாச்சா?' என்று கேட்டார். "இன்னும் இல்லிங்க" என்று இராசகோபால் கூறினார்.

அண்ணா சிரித்துக்கொண்டே, 'அட உனக்கல்லய்யா, அந்த எலிக்கு போட்டாச்சா என்றல்லவா கேட்டேன்? அதனுடைய நஞ்சு உங்களைப் பாதிப்பதைவிட உங்களுடைய நஞ்சு அந்த எலியை அதிகமாகப் பாதித்துவிடும்'! என்று கூறினார். அதைக்கேட்டு சுற்றியிருந்தவர்கள் அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

ஃ ஃ ஃ

## வேலூர் சிறையில்...

விலைவாசி உயர்வைக் கண்டித்து தி. மு. க. நடத்திய மறியல்போராட்டத்தின்போது, அண்ணா அவர்கள் வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் மறியல் செய்தபோது கைது செய்யப்பட்டார்.

பத்து வாரம் சிறைத்தண்டனையும்அளித்து வேலூர் மத்திய சிறையில் அடைத்துவிட்டது அரசு.

அவர் சிறைபுகுந்த நாள் 16-8-52.

சிறை புகுந்த அன்று, அதற்குமுன் அங்கு அடைபட்டிருந்த நானூறு தோழர்களுக்கும்

(10-ம் பக்கம் பார்க்க)

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

தினமும் 2, 6, 9-30 மணி.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)
சிறீகிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (அட்டன்) ராஜ் (நீர்கொழும்பு) வெம்பிலி (கண்டி)



ஸ்ரீதரின்

100 நாள் விழாக்கொண்டாடிய
மற்றொரு அழகிய
ஈஸ்மன் கலர் சித்திரம்

சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா,
எல். விஜயலக்ஷ்மி, முத்துராமன்,
குமாரி சச்சு, வி. கே. ராமசாமி,
நாகேஷ், பாலையா.

— நடித்த —

# ஊட்டிவரை உறவு

(பாஸ்கள் சலுகைகள் ரத்து)

## 6-வது வாரமாக காட்சி தருகிறது!

### லிடோ (பொரளை)


ஜனாதிபதி பரிசு பெற்ற சித்திரம்! (தகழி சிவசங்கரம்பிள்ளையின்)



# செம்மீன்

## 2வது வெற்றி முழக்கமிடும் வாரம்!!

சென்ரல் (மருதானை) நவா (கொம்பனித்தெரு) ராணி (யாழ்நகர்) ராஜேஸ்வரா (மட்டுநகர்)
ஜோதி (திருமலை) லிபர்ட்டி (ஹட்டன்)
ஆகியதிரைகளில்




*ஜெய்சங்கர் *விஜயநிர்மலா *விஜயலலிதா
*சோ, *அசோகன் *தாம்பரம்லலிதா
கள்ளப்பார்ட்நடராஜன்,
—நடித்த—

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

# நீலகிரி எக்ஸ்பிரஸ்

இசை: டி. கே. ராமமூர்த்தி டைரக்ஷன்: திருமலை—மகாலிங்கம் கதை வசனம் 'சோ'



## 4- வது ஜனத்திரள் வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) ஈரொஸ் (பாமன்கடை) ஜசீமா (கிராண்ட்பாஸ்) இம்பீரியல் (மட்டுநகர்)
வின்சர் (யாழ்ப்பாணம்) அசோகா (புத்தளம்)

எம். ஜி. ஆரின் 100 படங்களிலும் மிக உன்னதமான சித்திரம்
தமிழ் நாட்டிலே 100 நாட்களுக்கு
மேலாக ஓடியது

கடந்த ஆண்டின் எம். ஜி. ஆர். சித்திரங்கள் எல்லாவற்றிலும் கூடிய வசூல் பெற்ற சித்திரம்!

எ. ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, ராஜஸ்ரீ,
நாகேஷ், நம்பியார், விஜயலட்சுமி நடிக்கும்

# குடியிருந்த கோயில்

(ஈஸ்மன் கலர் சித்திரம்)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ஆண்டும் பெப்ரவரி மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411